Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

தமிழ் Mirror

WEDNESDAY, JULY 19, 2023

புதன்கிழமை ஜூலை 19, 2023 | ஒளி: 09 கதிர்: 043 | பக்கம்: 06 | வடக்கு,கிழக்கு | FREE

கோவில்களை இடித்து விகாரைகளை கட்டினால்

# நல்லிணக்கம் எவ்வாறு சாத்தியமாகும்?

### சரத் வீரசேகரவின் உரைக்கு சிறிதரன் எம்.பி கண்டனம்



மதங்களை மதிக்காது, கோவில்களை இடித்து அங்கே பௌத்த விகாரைகளை அமைக்க வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் நல்லிணக்கம் எவ்வாறு சாத்தியமாகும்? என்று கேள்வியெழுப்பிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்பி எஸ். சிறிதரன், சரத் வீரசேகர இந்தச் சபையில் நிகழ்த்திய உரை மற்றும் குருந்தூர் மலையில் பொலிஸார் நடந்துகொண்ட முறை என்பன அப்பட்டமான அத்துமீறல்களாகும். அவற்றை இந்தச் சபையில் கண்டிப்பதாகவும் தமிழ் நீதவான்களின் செயற்பாடுகளை மதிக்கப் பழகுங்கள் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) இடம்பெற்ற சுங்க வரி கட்டளை சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், “முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் சிங்கள பௌத்த பிக்குகளும், தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக்குழுவின் தலைவரும் முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் அரச தரப்பு எம்.பி.யுமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவும் சென்று இனவாத ரீதியான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர்.

ஜூலை 4 ஆம் திகதி அவர்கள் அங்கு குழப்பங்களை ஏற்படுத்தியது மட்டுமன்றி, 7 ஆம் திகதி இந்த சபையில் சரத் வீரசேகர இனவாத

தொடர்ச்சி P2

## தமிழ் எம்.பிக்களிடம் ஜனாதிபதி சொன்னது என்ன?

வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் செவ்வாய்க்கிழமை (18) முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில், பயங்கரவாதத் தடைச் சட்டமூலம் தொடர்பில் ஜனாதிபதி கலந்துரையாடினார். ஐரோப்பிய ஒன்றிய முன்மொழிவுகளை,ஜூலை 18 ஆம் திகதி வரைபுக் குழு ஆராய உள்ளது. திருத்தங்கள் குறித்து ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுத்த பின்னர் சட்டமூலம் மீண்டும் வர்த்தமானியில் வெளியிடப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



## 21 நிறைவு: 24 ஆரம்பம்

அரச மற்றும் அரச அங்கிகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் 1ஆவது தவணை ஜூலை 21ஆம் திகதி முடிவடையவுள்ள நிலையில், 2ஆவது தவணைக்கான முதல் கட்டம் ஜூலை 24ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை அகதிகள் 15 பேரை

## ஆஸிக்கு அனுப்ப முயன்ற 7 பேர் இந்தியாவில் விடுதலை

2010ஆம் ஆண்டு மீன்பிடி படகு மூலம் புதுவை, தேங்காய்த்திட்டு துறைமுகத்திலிருந்து இலங்கை அகதிகள் 15 பேரை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்ப முயன்றமை குறித்து தாக்கல் செய்யப்பட்ட ஆட்கடத்தல் வழக்கு நிரூபிக்கப்படாததால், அனைவரும் விடுதலை செய்யப்படுவதாக புதுவை தலைமை குற்றவியல் நீதிமன்ற நீதிபதி அறிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து சி.பி.சி.ஐ.டி பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

தொடர்ச்சி P2



## இல்லாத பிரச்சினைகளை தோற்றுவிக்க முயற்சி

2017ஆம் ஆண்டுக்குப் பின்னர், நூற்றுக்கும் அதிகமான மருந்து வகைகள் பயன்பாட்டுக்கு தடை செய்யப்பட்டுள்ளன என்றும் உயிர்காக்கும் 14 வகையான மருந்துகள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்கு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்த சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, இல்லாத பிரச்சினைகளை தோற்றுவிக்க முயல்கின்றனர் என்று தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது வெடித்த சமையல் எரிவாயு சிலிண்டர்கள்

தொடர்ச்சி P2

இராஜதந்திர மட்டத்தில்

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எட்டுவதே எதிர்பார்ப்பு




இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இராஜதந்திர மட்டத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எட்டுவதற்கு தேவையான செயற்பாடுகளை நிறைவு செய்வதே ஜனாதிபதியின் எதிர்வரும் இந்திய விஜயத்தின் எதிர்பார்ப்பு என்று அமைச்சரவைப் பேச்சாளர், வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை (18) நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எதிர்வரும் 20ஆம் திகதி ஜனாதிபதி இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்வார் என அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும்,

தொடர்ச்சி P2

கொரோனாவில் பலியான முஸ்லிம்களின்

## சடலங்களை எரித்தமை குறித்து அமைச்சரவை மட்ட விசாரணை

கொரோனா தொற்றால் மரணமடைந்த முஸ்லிம்களின் சடலங்களை எரிப்பதற்கு பிழையான தீர்மானம் மேற்கொண்ட கொரோனா குழு அதிகாரிகளுக்கு எதிராக அமைச்சரவை மட்டத்தில் விசாரணை மேற்கொள்ளப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உறுதியளித்தார்.

தொடர்ச்சி P2

## மக்களை பாதிக்காமல் நீர்க்கட்டண அதிகரிப்பு

### சபையில் அமைச்சர் ஜீவன் அறிவிப்பு



மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலேயே கட்டண உயர்வு இடம்பெறும் என்றும் உத்தேச திட்டம் எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



முழு அரச பொறிமுறையையும்

## டிஜிட்டல் மயம்

இந்த நாட்டில் காணப்படும் ஊழல் மோசடிகளை நிறுத்துவதென்றால் முழு அரச பொறிமுறைகளையும் டிஜிட்டல் மயப்படுத்த வேண்டும் என்றும் அப்போது வருமானத்தை ஈட்டும் அனைத்து நிறுவனங்களும் அதன் மூலம் முழுமையான டிஜிட்டல் முறைமைக்கு உட்படுத்தப்படும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இலங்கைக்கு உதவ உலக வங்கி தயார்



இலங்கைக்கு ஆதரவளிக்க உலக வங்கி தயாராக இருப்பதாகவும் எதிர்வரும் மாதங்கள் முக்கியமானதாக இருக்கும் எனவும் உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்திற்கான உப தலைவர் மார்ட்டின் ரைசர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கொழும்பில் சந்தித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதார மீட்சிக்கு இன்றியமையாத தனியார் முதலீட்டை அதிகரிப்பதற்கான கடனில் முன்னேற்றம் மற்றும் சீர்திருத்தங்கள் குறித்து கலந்துரையாடியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



## கோதுமை மாவின் விலை குறைப்பு

இலங்கையின் முதன்மையான கோதுமை மா இறக்குமதியாளர்களான பிறீமா மற்றும் செரெண்டிப் ஆகிய நிறுவனங்கள் தமது கோதுமை மா விலைகளை குறைப்பதாக அறிவித்தன.

செவ்வாய்க்கிழமை (18) அமலாகும் வகையில் 1 கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 10 ரூபாயால் குறைப்பட்டுள்ளதாக குறித்த நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

## வெள்ளியுடன் வேலை பறிபோகும் அபாயம்



உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்பாளர்களாக போட்டியிடும் அரச சேவையில் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களாக பணியாற்றுபவர்களின் வேலைகள் ஜூலை 21 ஆம் திகதியுடன் பறிபோகும் அபாயம் காணப்படுவதாக எதிர்க்கட்சியில் சுயாதீன அணியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் அரச ஊழியர்களின் பணி பாதுகாப்பு குறித்து பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) எதிர்க்கட்சிகள் முன்வைத்த கோரிக்கையின் போது தனது கருத்தை முன்வைக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



வங்குரோத்து குறித்து விசாரிக்கும் தெரிவுக்குழுவின்

## தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்குக

பாராளுமன்றத்தில் ஏதேனும் அதிகாரம் தொடர்பில் நம்பிக்கை இருக்குமாக இருந்தாலோ, நடந்துள்ள விடயம் தொடர்பில் உண்மையை அறிய வேண்டும் என்ற நோக்கம் இருந்தாலோ தெரிவுக்குழு தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்க வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாட்டின் வங்குரோத்து நிலைமைக்கு பொறுப்பு கூற வேண்டிய தரப்பினரிடமே அது தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்கும் தெரிவுக்குழு தலைவர் பதவியை வழங்குவதானது உண்மையான குற்றவாளிகளை மாற்றி, வேறு நபர்களை குற்றவாளிகளாக காட்ட வாய்ப்பாக அமையும் என்றார்.

தொடர்ச்சி P2

## 2 சிறுத்தை குட்டிகள் மீட்பு; ஏற்க தாய் மறுப்பு




தாயிடமிருந்து பிரிக்கப்பட்ட இரண்டு சிறுத்தை குட்டிகள் வனவிலங்கு அதிகாரிகளின் பாதுகாப்பில் உள்ளன.

மஸ்கெலியா பகுதியில் உள்ள தேயிலை தோட்டத்தில் தனியாக இருந்த இரண்டு சிறுத்தை குட்டிகளை கடந்த 17ஆம் திகதி பிடித்து நல்லத்தண்ணி வனஜீவராசிகள்

தொடர்ச்சி

## இரட்டை நிலைப்பாட்டை நிறுத்திக்கொள்ள வேண்டும்



எமது நாட்டில் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக அமெரிக்க தூதுவர் நடவடிக்கை எடுத்து வருகிறார். காணி உரிமை, காணாமல் போனவர்களின் விடுதலை, மனித புதைக்குழி, உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக பல்வேறு விடயங்கள் தொடர்பாக குறிப்பிட்டுள்ளார். தமிழ் சமூகத்துக்காக அவர்கள் மேற்கொள்ளும் இந்த விடயங்களை நாங்கள் வரவேற்கிறோம். அதேவேளை பாலஸ்தீனில் இஸ்ரேல் அரசாங்கம் முன்னெடுக்கும் மனித உரிமை மீறல்களுக்கு அமெரிக்க தூதரகம் ஆதரவளித்து உதவி வருகின்றது. எனவே இவ்வாறான இரட்டை நிலைப்பாட்டை வல்லரச நாடுகள் நிறுத்திக்கொள்ள வேண்டும் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஆஸிக்கு...

வீராம்பட்டினத்தை சேர்ந்த திராவிடர் விடுதலைக்கழக தலைவர் லோகு. ஐயப்பன், தி.மு.க.வை சேர்ந்த சக்திவேல், காரைக்கால் மாவட்ட பா.ம.க. செயலாளர் தேவமணி உட்பட 11 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இதில் 3 பேர் தலைமறைவாகிய நிலையில், 8 பேர் சிறையில் அடைக்கப்பட்டு பிணையில் வெளிவந்தனர். இதற்கிடையே சக்திவேல், லோகுஜயப்பன், தேவமணி ஆகியோர் மீது தேசிய பாதுகாப்பு சட்டம் பாய்ந்தது.

இதிலிருந்து விடுவிக்கக்கோரி மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு அவர்கள் கடிதம் எழுதினர். இதன்பின் 3 பேரும் அந்தசச் சட்டத்திலிருந்து விடுவிக்கப்பட்டனர். இந்த நிலையில் அஸ்திரேலியாவுக்கு ஆட்கடத்த முயன்ற வழக்கு புதுவை தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் நடந்து வந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி மோகன், ஆட்கடத்தல் வழக்கு நிரூபிக்கப்படாததால், அனைவரும் விடுதலை செய்யப்படுவதாக அறிவித்தார். வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட தேவமணி 2021ஆம் ஆண்டு வெட்டி படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இல்லாத...

அவர் பதவி விலகியவுடன் வெடிக்கவில்லை என்றும் ஆகவே சுகாதார சேவை குறித்து வெளியாகும் பொய்யான செய்திகள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தியுள்ளோம் என்றும் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) முன்வைத்த ‘மருந்து மரணங்கள்’ தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்த சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேலும் கூறுகையில்,

“மருந்து தட்டுப்பாடு மற்றும் தரமற்ற மருந்து இறக்குமதி என்று பல்வேறு மாறுப்பட்ட கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்விடயம் தொடர்பில் சுகாதாரத்துறை அமைச்சு விசாரணை முன்னெடுத்துள்ளது. அறிக்கை கிடைத்ததும் அதை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பேன்.

பேராதனை வைத்தியசாலையில் உயிரிழந்த யுவதியின் மரணத்தை தொடர்ந்து தரமற்ற மருந்து இறக்குமதி செய்யப்பட்டு நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது என்ற நிலைப்பாட்டை தோற்றுவிக்க ஒருதரப்பினர் முயற்சிக்கிறார்கள். இந்த யுவதிக்கு பயன்படுத்திய மருந்து 2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி காலப்பகுதியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு 20 ஆண்டுகாலமாக பயன்பாட்டில் உள்ளது.

பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் ஊடாக இந்த மருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் குறுகிய நோக்கங்களுக்காக இலவச சுகாதார சேவையை பலவீனப்படுத்தும் வகையில் போலியான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

பேராதனை வைத்தியசாலையில் உயிரிழந்த அந்த யுவதிக்கு செலுத்தப்பட்ட தடுப்பூசி அன்றைய தினம் 10 இற்கும் அதிகமானோருக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள அரச வைத்தியசாலைகளில் 1 இலட்சத்து 45 ஆயிரத்துக்கும் அதிகமாக ஐ.வி என்ற இந்த தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் 79 ஆயிரத்துக்கும் அதிகமான தடுப்பூசிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தடுப்பூசியால் பேராதனை வைத்தியசாலையில் யுவதி உயிரிழந்ததாக பிரசாரப்படுத்தப்படுகின்றது. இது முறையற்றது. கோட்டபாய ஜனாதிபதியாகவிருந்தபோது வெடித்த சமையல் எரிவாயு சிலிண்டர்கள் அவர் பதவி விலகியவுடன் வெடிக்கவில்லை. ஆகவே சுகாதார சேவை குறித்து வெளியாகும் பொய்யான செய்திகள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தியுள்ளோம்.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் ஒருசில முறையற்ற செயற்பாடுகளை தடுத்ததால் இன்று எனக்கு எதிரான தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளன. மருந்து விவகாரம் தொடர்பில் பாராளுமன்ற விவாதத்தை நடத்துங்கள் பல விடயங்களை வெளிப்படுத்துகிறேன். மருந்து விஷமானதால் பலர் உயிரிழக்கிறார்கள் என செய்திகள் வெளியாகுகின்றன. பொய்யான செய்திகள் இலவச சுகாதார சேவைக்கு பாரிய அச்சுறுத்தலாக உள்ளது.

குளியாப்பிட்டிய பகுதியில் 4 மாத குழந்தை உயிரிழப்பு தொடர்பில் பரஸ்பர கருத்துக்கள் குறிப்பிடுகிறது. அந்த குழந்தைக்கு செலுத்திய தடுப்பூசி அன்றைய தினமே 19 குழந்தைகளுக்கும் செலுத்தப்பட்டுள்ளது. துரதிர்ஷ்டவசமாக குழந்தை உயிரிழந்துள்ளது என்றார்.

# நல்லிணக்கம் எவ்வாறு சாத்தியமாகும்?

ரீதியிலான கருத்துகளை வெளியிட்டிருந்தார்.

தமிழ் நீதிபதியொருவர் இவ்வாறான தீர்ப்புகளை வழங்க முடியாது என்றும், அவர் தமிழ் நீதிபதியாக தனது செயற்பாட்டை செய்ய முடியாது என்றும் கூறியிருந்தார். அப்படியாயின் இந்த நாட்டில் உள்ள தமிழ் நீதிபதிகள், தமிழ் சட்டத்தரணிகள், தமிழ் சட்டமா அதிபர்களை நீக்கிவிடுங்கள்.

அப்படி செய்துவிட்டு சிங்கள மயமாதலை அறிவிக்கலாமே? இனவாத சிந்தனையுள்ளவர்கள் மிக மோசமான வகையில் கருத்துகளை வெளியிடுகின்றனர் என்றால் இந்த நாடு எங்கே செல்லப் போகின்றது?

தமிழ் நீதிபதியொருவர் குருந்தூர்மலையில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பில் உத்தரவு சொல்லக்கூடாது என்றால் யார் சொல்வார்கள்? அப்படியென்றால் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தை மூடிவிடுங்கள்.

இதேவேளை குருந்தூர் மலை ஆதிசிவன் ஆலய அகழ்வுகளை செய்கின்ற போது சிவனுடைய சிலை அங்கே கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது எல்லோருக்கும் காட்டப்பட்ட சிவலிங்கத்தை இப்போது காணவில்லை. விகாரை அமைக்கப்படும் போது அங்கிருந்த சிவலிங்கத்தை உடைத்தெறிந்துவிட்டார்களா? இல்லையேல் சிவலிங்கத்தை புதைத்து விட்டார்களா? அதற்கு என்ன நடந்தது என்பதனை இந்த சபையின் ஊடாக கூற முடியுமா?

அங்கு ஆதிசிவன் திரிசூலத்தை மக்கள் வணங்கியுள்ளனர். 1905 ஆம் ஆண்டில் சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வாளர் எச்.வி.வெல் லூவிஸ், குருந்தூர் மலை ஆய்வில் அங்கே ஆவுடைய சதுர வடிவிலான சிவலிங்கம், நந்தி என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதன்படி தொல்லியல் ரீதியில் சைவ சிவாலயம் இருந்தமைக்கான உறுதிப்பாட்டை அவர்கள் கூறியுள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் அங்கு பௌத்த விகாரைதான் இருந்தது என்று சொல்லி, இந்த நாட்டின் நீதித்துறையை கேள்விக்குட்படுத்தி, நீதவானை கேள்விக்கு உட்படுத்தி நடந்துகொள்ளும் அந்த பாராளுமன்ற உறுப்பினரின் செயற்பாடு சரிதானா? சபை அதனை ஏற்றுக்கொள்கின்றதாக என்றும் கேள்வியெழுப்பினார்.

## வெள்ளியுடன்...

தொடர்ச்சியாக உள்ளூராட்சி தேர்தலை ஒத்தி வைப்பதால் வேட்பாளர்களாக போட்டியிடும் அரச ஊழியர்கள் பெரும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளது என்றும் அரச ஊழியர்களுக்கே பிரச்சினை ஏற்பட்டுள்ளது எனவும் விசேட சுற்றுநிருபத்தை வெளியிட்டு இந்த பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டார்.

“இது தொடர்பான பிரச்சினை பல்வேறு நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. ஆசிரியர்கள் சிலருக்கு தூர இடங்களில் உள்ள பாடசாலைகளுக்கு செல்ல நேரிட்டுள்ளது. குறித்த பாடசாலைகளில் பாடங்களுக்கான ஆசிரியர்கள் இல்லாமையால் மாணவர்கள் பெரும் நெருக்கடிகளுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இது தொடர்பில் நடவடிக்கை எடுத்து புதிதாக அவர்களுக்காக சுற்றுநிருபத்தை வெளியிட்டு பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்” என, ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இதுகுறித்து தெரிவித்த டலஸ் எம்.பி, “நிரந்தர அரச ஊழியர்கள் தொடர்பிலேலேயே நாங்கள் பேசுகிறோம். ஆனால் நிரந்தரமற்ற ஒப்பந்த அடிப்படையில் மற்றும் தற்காலிக பணியில் இருக்கும் உழியர்களுக்கு தமது சேவை பிரதேசத்திலோ அல்லது வேறு இடத்திற்கு சென்று பணியாற்றவோ அனுமதி வழங்கப்படவில்லை. இந்நிலையில் 6 மாதங்களுக்கு தொடர்ச்சியாக சேவைக்கு செல்லாவிட்டால் அவர்களின் நியமனம் இரத்தாகும்.

ஜூலை 21 ஆம் திகதியுடன் 6 மாதங்கள் பூர்த்தியாகின்றது. இதனால் இது பாரதூரமான நிலைமையே. அனைத்து கட்சிகளிலும் நூற்றுக்கணக்கில் இவ்வாறான ஊழியர்கள் உள்ளனர். அவர்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றார்.

## மக்களை...

மின்சார கட்டணம் 66 சதவீதத்தால் அதிகரித்துள்ளதால் நீர் கட்டணத்தையும் அதிகரிக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்று தெரிவித்த அவர், இதற்கு எதிரணிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மானால் நீர் கட்டணம் தொடர்பில் பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் மேலும் கூறிய அவர்,“இந்த கேள்வியை எழுப்பியமை தொடர்பில் முதலில் நன்றிகளை கூறிக்கொள்கின்றேன். நீர் கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டியதன் அவசியத்துவம் தொடர்பில் கடந்த பெப்ரவரி மாதம் பாராளுமன்றத்தில் தெளிவுபடுத்தியிருந்தேன்.

மின்சார கட்டணம் 66 வீதத்தால் அதிகரிக்கப்பட்டு உள்ளதால், நீர்வழங்கல் துறையை நிர்வகிப்பதற்கு 425 மில்லியன் ரூபாய் செலவு ஏற்படுகின்றது. இதற்கு மேலதிகமாக 2 ஆயிரத்து 400 மில்லியன் ரூபாய் கடனும் செலுத்தப்படுகின்றது. இதுவரை காலமும் முறையான நடவடிக்கை இடம்பெறாமை இதற்கு காரணமாகும். அதனை சீர் செய்வதற்கான நடவடிக்கையாகவே இது இடம்பெறுகின்றது.

> மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலேயே நீர் கட்டணம் உயர்த்தப்படும்

மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலேயே நீர் கட்டணம் உயர்த்தப்படும். பாராளுமன்றத்தில் நாளை (இன்று) ஆலோசனைக்குழு கூட்டம் நடைபெறவுள்ளது. இதன்போது இது பற்றி தெளிவுபடுத்தப்படும்.

ஒரு குடும்பத்தில் ஐவர் இருந்தால் 15 முதல் 20 அலகுகள்தான் பயன்படுத்துகின்றனர். இவர்களுக்கும், சமுர்த்தி பயனாளிகளுக்கும் நீர் கட்டண உயர்வால் தாக்கம் ஏற்படாது. நீர் கட்டண அதிகரிப்பு யோசனை எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மக்களின் வயிற்றில் அடிக்க வேண்டும் என்ற நோக்கம் எமக்கு இல்லை.

நீர்க்கட்டணம் அதிகரிப்பு தொடர்பில் அண்மையில் கூட்டமொன்றை நடத்தியிருந்தேன். இதில் எதிரணியினர் பங்கேற்கவில்லை. அன்று இல்லாத அக்கறை இன்று திடீரென ஏன் வந்துள்ளன? தூங்குபவரை எழுப்பலாம். தூங்குபவர்போல் நடிப்பவரை எழுப்ப முடியாது” என்றார்.

## தலைவர்...

நாட்டின் வங்குரோத்து நிலைமைக்கான காரணத்தை கண்டறிவதற்காக அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட தெரிவுக்குழு தொடர்பில் பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில், “நாட்டின் வங்குரோத்து நிலைமைக்கு தற்போதைய அரசாங்கமே பொறுப்பு கூற வேண்டியுள்ளது. இந்த அரசாங்கம் பொதுஜன பெரமுனவை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் கட்சியின் செயலாளரே இது தொடர்பான தெரிவுக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

> இதற்கு காரணம் என்று கூறப்படும் தரப்பில் இருந்தே குழுவில் தலைவர் நியமிக்கப்படுவது நியாயமற்றது

அப்போது நிதி அமைச்சராக இருந்த பசில் ராஜபக்‌ஷவே கட்சியின் தேசிய அமைப்பாளராக இருக்கின்றார். கட்சியின் தலைமைப் பதவியில் அப்போது ஜனாதிபதியாக இருந்தவரின் சகோதரர் ஆகும். இதனால் வங்குரோத்த நிலைமை தொடர்பில் உண்மையை அறிய வேண்டுமென்றால் இதற்கு காரணம் என்று கூறப்படும் தரப்பில் இருந்தே குழுவில் தலைவர் நியமிக்கப்படுவது நியாயமற்றது என்றார்.

## சடலங்களை...

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் எம்.பி.யுமான ரவூப் ஹக்கீம் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது கேள்வியெழுப்பிய ரவூப் ஹக்கீம் எம்.பி, “ கொரோனா தொற்றினால் மரணித்த முஸ்லிம்களின் சடலங்களை எரிப்பதற்கு கொரோனா குழு எடுத்த தீர்மானம் வைராக்கியமிக்க குற்றம். அதனால் இவர்களுக்கு எதிராக பாதிக்கப்பட்ட குடும்பத்தின் உறவினர்கள் நீதிமன்றத்திற்கு செல்ல நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அதனால் அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட கொரோனா குழு அதிகாரிகள் மேற்கொண்ட தவறான தீர்மானம் தொடர்பாக அமைச்சரவை மட்டத்தில் விசாரணை மேற்கொள்ள தயாரா?.

ஏனெனில் உலக நாடுகள் அனைத்தும் கொரோனா தொற்றினால் மரணித்தவர்களின் சடலங்களை எரிப்பதற்கு தீர்மானத்தை எடுக்காத நிலையில், பிழையான விஞ்ஞான அடிப்படையில் தீர்மானம் மேற்கொண்டுள்ளனர்.

முஸ்லிம்களுக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய இந்த அதிகாரிகள் தொடர்பாக குறைந்தபட்சம் அமைச்சரவை மட்டத்திலாவது விசாரணை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? பிழையான தீர்மானம் மேற்கொண்ட குழுவின் அதிகாரிகள் தொடர்பாக விசாரணை நடத்துமாறே நான் பகிரங்கமா கேட்கிறேன்” என்றார்.

## டிஜிட்டல் மயப்படுத்த

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) இடம்பெற்ற வாய் மூல விடைக்கான வினா நேரத்தில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“நிதியமைச்சும் மத்திய வங்கியும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக பாராளுமன்றத்தில் செயற்படும் குழுக்கள் பொருத்தமான மாற்று யோசனைகளை முன்வைக்க முடியுமானால் நாம் அது தொடர்பில் கவனம் செலுத்த தயாராகவே உள்ளோம்.

அதேபோன்று இந்த நாட்டில் காணப்படும் ஊழல் மோசடிகளை நிறுத்துவதென்றால் முழு அரச பொறிமுறைகளையும் டிஜிட்டல் மயப்படுத்த வேண்டும். அப்போது வருமானத்தை ஈட்டும் அனைத்து நிறுவனங்களும் அதன் மூலம் முழுமையான டிஜிட்டல் முறைமைக்கு உட்படுத்தப்படும்.

அந்த வகையில் இலங்கை சுங்கம், வருமான வரி திணைக்களம், கலால் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்கள் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறு முழுமையான டிஜிட்டல் மயப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படாதிருந்தால் ஊழல், மோசடி மற்றும் வீண் விரயங்களை ஒருபோதும் தடுக்க முடியாமல் போகும்.

ஒருபுறம் நாம் அரச நிர்வாகத்தை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் அதே வேளை, பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வுள்ள இலஞ்ச ஊழல் சட்டமானது இது போன்ற நடவடிக்கைகள் இடம் பெறாமல் தடுப்பதற்கு முக்கியமான வழிகளை வகுக்கும் என்றும் நாம் எதிர்பார்க்கின்றோம்” என்றார்.

## புரிந்துணர்வு...

அங்கு இரு மாநிலங்களுக்கு இடையிலான கடன் மறுசீரமைப்புத் திட்டம், பொருளாதாரம், சமூகம் மற்றும் கலாசார முன்னேற்றம் தொடர்பாக பல்வேறு கலந்துரையாடல்களை அவர் மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு, எதிர்வரும் 20 ஆம் திகதி புதுடெல்லி செல்லவுள்ளார். அவர், இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

## 2 சிறுத்தை...

அலுவலக அதிகாரிகளிடம் தோட்ட தொழிலாளர்கள் ஒப்படைத்தனர்.

ஒரு மாத வயதுடைய இரண்டு சிறுத்தை குட்டிகளை தேயிலை தோட்டத்தில் பாதுகாப்பான இடத்துக்கு தாய் கொண்டு வந்ததையடுத்து தாய் இரை தேட சென்றுள்ளது.

இதன் போது தேயிலை தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த தோட்ட தொழிலாளர்கள் இரண்டு சிறுத்தைக் குட்டிகளை பார்த்து தோட்ட முகாமையாளருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

தோட்ட முகாமைத்துவம், நல்லத்தண்ணி வனவிலங்கு அலுவலக அதிகாரிகள். ரன்தெனிகல கால்நடை வைத்தியர் அலுவலகத்தின் கால்நடை வைத்தியரின் ஆலோசனைக்கமைய தொழிலாளர்களின் பராமரிப்பில் இருந்த இரண்டு குட்டிகளும் தாயாரிடம் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக நல்லத்தண்ணி வனஜீவராசிகள் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தேயிலை தோட்டத்தில் இருந்த இரண்டு சிறுத்தை குட்டிகளையும் மக்கள் பிடித்து தொட்ட பிறகு தாய் ஏற்க மறுப்பதால், புலிக்குட்டிகள் இருந்த இடத்திலேயே தங்கி வாழ வாய்ப்பு அளித்து உயிர் காக்கப்படுகிறது என வனத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரை தேடும் சிறுத்தைக் குட்டிகளின் தாய் அந்த இடத்துக்கு திரும்பி வந்து தனது குட்டிகளை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லும் என்று கூறினார்.

## இரட்டை நிலைப்பாட்டை ...

எம்.பியுமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (18) இடம்பெற்ற பாலஸ்தீன மக்கள் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில், பாலஸ்தீனில் அகதிமுகாம் ஒன்றின் மீது இஸ்ரேல் இராணுவத்தினர் தொடர்ந்து இரண்டு தினங்கள் மேற்கொண்ட தாக்குதலில் அந்த முகாம் முற்றாக சேதமடைந்து 12பேர் உயிரிழந்திருந்தனர். இந்தத் தாக்குதல் இடம்பெற்று இரண்டு தினங்களில் இது தொடர்பாக இலங்கை அரசாங்கம் தனது கண்டனத்தை வெளிப்படுத்தவேண்டும் என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரியிடம் இந்தச் சபையில் கேட்டுக்கொண்டிருந்தேன். குறைந்த பட்சம் கவலையையாவது தெரிவிக்குமாறு கேட்டிருந்தேன். இது தொடர்பாக கண்டனத்தை வெளியிடுவதாக அவர் வாக்குறுதி அளித்திருந்தார்.ஆனால் இதுவரை அது தொடர்பில் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

நாங்கள் பாலஸ்தீனியர்களின் நண்பர்கள் என்கின்றோம். இலங்கை, பலஸ்தீன நட்புறவுச் சங்கத்தின் உறுப்பினர்களாக இருக்கிறோம். ஆனால், ஏன் இந்தத் தாக்குதல் தொடர்பில் இலங்கை மௌனமாக இருக்கிறது என்பதுதான் புரியாமலுள்ளது என்றார்.

# "நிதானம் இழந்து மாணவியை தாக்கி விட்டேன்"

## அதிபர் மன்றில் தெரிவிப்பு

எம். றொசாந்த்

தீவக வலயத்தில் உள்ள பாடசாலை ஒன்றில், கல்வி கற்கும் ஒன்பது வயதான மாணவியை, பிளாஸ்ரிக் குழாயால் 20 தடவைகள் தாக்கியதாக பாடசாலை அதிபருக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டது.

அதனை அடுத்து, ஞாயிற்றுக்கிழமை (16) ஊர்காவற்றுறை பொலிஸாரால் பாடசாலை அதிபர் கைது செய்யப்பட்டு, திங்கட்கிழமை (17) ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

நீதிமன்றில் நடைபெற்ற விசாரணைகளின் போது, பாடசாலையில் மேலதிக வகுப்பு நடத்தியதாகவும், அதன்போது, ஒரு விடயத்தை மூன்று தரம் விளங்கப்படுத்தியும் மாணவியால் விளங்கிக்கொள்ள முடியாது தவறிழைத்தமையால், நிதானம் இழந்து, மாணவியை அடித்ததாகவும் அதிபர் மன்றில் கூறினார்.

அதனை அடுத்து, நிதானம் இழப்பதும் ஒரு வகை நோய் எனவும் அதற்கு உளவியல் சிகிச்சை பெற வேண்டும் எனவும் அறிவுறுத்திய நீதவான், ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீர பிணையில் செல்ல அதிபரை அனுமதித்து, வழக்கை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

அதேவேளை, மாணவியை தாக்கிய அன்றைய தினம், குறித்த மாணவி உள்ளிட்ட 09 மாணவிகளை அதிபர் தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



# பூநகர் முத்துமாரிம்மன் அலங்கார உற்சவம்

அ. அச்சுதன்

திருகோணமலை, ஈச்சிலம்பற்று பிரதேசத்தில் பூநகர் கிராமத்தில் அமையப்பெற்றுள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த அலங்கார உற்வம், நேற்று (18) பகல் புண்ணியாக பூசை, விசேட பூசையுடன் ஆரம்பித்தது.

உற்சவத்தின் இரண்டாம் நாளான இன்று (19) காலை 8 மணிக்கு கிராமம் தோறும் ஊர்வலம் வரவிருப்பதுடன் வியாழக்கிழமை (20) வசந்தமண்டப அலங்கார பூசையும் சுவாமி உள்வீதி வலம்வருதலும் இசைநிகழ்ச்சியும், வெள்ளிக்கிழமை (21) காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெற்று, திருப்பொன்னனூஞ்சல், மகேஸ்வர பூசையுடன் உற்சவம் நிறைவுபெறும்.

# காய்ச்சலால் புதுப்பெண் மரணம்

எம்.றொசாந்த்

திருமணமாகி நான்கு மாதங்களேயான யாழ்ப்பாணம், கொல்லங்கலட்டி பகுதியை சேர்ந்த சுகிர்தராசா நிதர்சினி (வயது 27) காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளார்.

மூன்று நாள்களாக கடுமையான காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் திங்கட்கிழமை தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# உத்தியோகத்தர்களுக்கு பாராட்டும் கௌரவமும்

நூருல் ஹுதா உமர்

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஒய்வூதிய திட்டத்தின் கீழ், 2022ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட அடைவைப் பெற்றுக் கொண்டமைக்காக சாய்ந்தமருது பிரதேச செயலக பிரிவுகளில் வழிநடத்திய கிளைகளின் தலைவர்கள் மற்றும் கிராம மட்டத்தில் அதிகளவான பங்களிப்பு செய்த உத்தியோகத்தர்களை கௌரவிக்கின்ற நிகழ்வு, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம் ஆசிக், உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ முவஃபிகா ஆகியோரின் தலைமையில் திங்கட்கிழமை (17) நடைபெற்றது.

இந்நிகழ்வில், பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ ஹமீட், கணக்காளர் ஏ.ஜே நுஸ்ரத் பானு, நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம் நளீர், சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.எல்.ஏ சபீர், கிராம உத்தியோகத்தர் எம்.எஸ் ஐதாக், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஏ.எம் நளீம், ஜே.எம் றம்ஸா ஆகியோருக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

### முஸ்லிம் திணைக்களத்தின்

# முஹர்ரம் புதுவருட நிகழ்வு

எம்.எஸ்.எம் ஸாகிர்

முஹர்ரம் புதுவருடத்தை சிறப்பிக்கும் முகமாக, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் (மஸ்ஜித் அல் மக்பூல்) மேமன் ஹனபி மஸ்ஜிதுடன் இணைந்து நடத்தும் முஹர்ரம் புதுவருட நிகழ்வு நாளை (20) மாலை 6.45 மணி முதல் கொழும்பு - 06, இல 175/5, டபிள்யூ. ஏ.டீ. சில்வா மாவத்தையிலுள்ள மேமன் ஹனபி மஸ்ஜிதில் நடைபெறும்.

முஸ்லிம் கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் பைஸல் ஆப்தீன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார்.

ஹிஜ்ரி 1445 ஆவது முஹர்ரம் புது வருட நிகழ்வாக, இந்நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# படுக்கைக்குச் சென்ற பெண் ஆற்றில் இருந்து சடலமாக மீட்பு

எஸ்.சதீஸ், கெ.தி.பெருமாள்

படுக்கையில் நித்திரை செய்துகொண்டிருந்த 56 வயதான பெண்ணொருவர், ஆற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட சம்பவம், நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சென்ஜோன் டிலரி கீழ்பிரிவில் செவ்வாய்க்கிழமை (18) இடம்பெற்றுள்ளது.

காசல்ரீ நீர்த் தேக்கத்துக்கு நீரேந்திச் செல்லும் கெசல்கமுவ ஓயாவில் ஆழமான குழி ஒன்றுக்குள் இருந்தே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நித்திரை செய்து கொண்டிருந்த ஆறுமுகம் தனலெட்சுமி என்ற பெண், திடீரென காணாமல் போயுள்ளார். அக்கம் பக்கத்தினருடன் இணைந்து உறவினர்கள் தேடிய போதே, அவரது சடலம் கண்டுப்பிடிக்கப்பட்டது.

ஐந்து பிள்ளைகளின் தயான மேற்படி பெண், நோயாளியாவார். அவரை, மாதாந்த கிளினிக்குக்காக, அழைத்துச் செல்வதற்கு காலை 4 மணியளவில் நித்திரையில் இருந்து எழுப்ப தேடியபோதே, அவர் காணாமல் போயிருந்தமை கண்டறியப்பட்டது.

ஸ்தலத்துக்கு விரைந்த தடயவியல் பொலிஸாரும் நோர்வூட் பொலிஸாரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# விவசாயிகளுக்கு பயிற்சிப் பட்டறை

எஸ். தில்லைநாதன்

'உயிர்த்தெழும் பூமி வேளாண்மை' என்னும் தொனிப்பொருளில் திருநெல்வேலியில் உள்ள விவசாயப் பயிற்சி நிலையத்தில் இன்று (19) முதல் இரண்டு நாள் தொழில்நுட்ப பயிற்சிப் பட்டறை நடைபெறவுள்ளது.

மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி ஸ்ரீரங்கன் அஞ்சனாதேவி தலைமையில், ஆளவாழ்தல் அறக்கட்டளை நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இத்தொழில்நுட்ப பயிற்சிப்பட்டறைக்கு பிரதம விருந்தினராக மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி சுகந்தினி செந்தில்குமரன் கலந்து கொள்ளவுள்ளார். வளவாளராக, இந்திய விவசாய ஆர்வலர் திருமதி மாரிமுத்து ரேவதி கலந்து கொள்வார்.

இப்பயிற்சி பட்டறையில் மண்ணைப் புதுப்பித்தல், நீர் முகாமைத்துவம், வினைத்திறனான சக்திப் பயன்பாடு, பயிர் முகாமைத்துவம், அறுவடையும் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பங்கள், சந்தை முகாமைத்துவம் போன்ற விடயங்களில் விவசாயிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்படும். இப்பயிற்சிப்பட்டறையில் விவசாயிகள் கலந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# திருமண வாழ்க்கை நடத்திய இளைஞன் கைது

ஷேன் செனவிரத்ன

காதலித்து திருமண வாழ்க்கை நடத்திய 29 வயதான இளைஞன், கட்டுகஸ்தோட்டை பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

14 வயதான சிறுமியுடன் காதல் கொண்டு, அந்த சிறுமியுடன் திருமண வாழ்க்கை நடத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழேயே அவ்விளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தத் திருமண வாழ்க்கைக்கு ஒத்துழைப்பு நல்கினார் என்ற குற்றச்சாட்டின் கீழ், சிறுமியின் தாயாரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் உள்ள கலவன் பாடசாலையில், 10ஆம் வகுப்பில் பயிலும் அச்சிறுமியுடன் மேற்படி இளைஞன் ஒருவருடமாக காதல் தொடர்பில் இருந்துள்ளார்.

இன்றைக்கு மூன்று நாள்களுக்கு முன்னர், அச்சிறுமியை தனது வீட்டுக்கு அழைத்துச் சென்ற இளைஞன், சிறுமியுடன் திருமண வாழ்க்கை நடத்தியுள்ளார்.

இதுதொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய, இளைஞனும் சிறுமியும் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில். இதற்கு சிறுமியின் தாயார் உடந்தையாக இருந்தமை தெரியவந்தது. அதன்பின்னர் தாயாரும் கைது செய்யப்பட்டார்.

இளைஞனையும் தாயாரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிறுமியை தங்களுடைய பொறுப்பின் கீழ், பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியக அதிகாரிகள் கொண்டுவந்துள்ளனர்.


## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கீழ் காணும் மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

**கம்பனியின் பழைய பெயர்:**
பேரன்ட்பே சேர்விசஸ் (பீவீடீ) எல்டீடி

**கம்பனியின் புதிய பெயர்:** பேரன்ட்பே லங்கா (பீவீடீ) எல்டீடி

**பதிவு அலுவலக முகவரி:**
இல. 74ஏ, 2ம் மாடி, அட்வான்டேஜ் கட்டிடம், தர்மபால மாவத்தை, கொழும்பு 07.

**கம்பனியின் இலக்கம்:** பீவீ 00240966

**மாற்றம் நிகழ்ந்த திகதி:** 06.07.2023

**டைரக்டர்**
**க்ரஸ்டன் கோர்பரேட் சேர்விசஸ் (பிவிடி) எல்டீடி**
**கம்பனியின் செயலாளர்கள்**






# 24ஆவது சிறந்த ஊடகவியல் விருதுகள் 2022

**விருது பிரிவுகள் பட்டியல் (அச்சு ஊடகம்)**

- ஆண்டின் மிகச் சிறந்த ஊடகவியலாளருக்கான மேர்வின் டி சில்வா விருது ( அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த புலனாய்வு ஊடகவியலாளருக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த சுவாரஷ்யமான செய்தி வெளியீட்டிற்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த இளம் ஊடகவியலாளருக்கான டென்ஸில் பீரிஸ் விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச்சிறந்த சுகாதார மற்றும் மருத்துவ அறிக்கையிடலுக்கான விருது (சிங்களம் / தமிழ் /ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த சூழலியல் அறிக்கையிடலுக்கான விருது (சிங்களம் /தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த விளையாட்டுத்துறை ஊடகவியலாளருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த பத்திரிகை பக்க வடிவமைப்புக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு பரிசு)
- ஆண்டின் மிகச் சிறந்த வணிகவியல் மற்றும் நிதியியல் ஊடகவியலாளருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த நெருக்கடியான சூழ்நிலைகளின் கீழ் அறிக்கையிடலுக்கான பேராசிரியர் கைலாசபதி விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிறிவர்த்தன விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- தகவல் அறியும் உரிமை சட்டத்தை பயன்படுத்தி எழுதப்பட்ட ஆண்டின் மிகச்சிறந்த செய்தி அல்லது விவரணத்திற்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த சமூகப் பிரச்சினைகளை அறிக்கையிடலுக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த விவரண எழுத்தாளருக்கான உபாலி விஜேவர்த்தன விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)

**விருது பிரிவுகள் பட்டியல் (பத்திரிகை இணையத்தளங்கள்)**

- மிகச் சிறந்த பத்திரிகை இணையத்தளம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- மிகச் சிறந்த காணொளி ஆக்கம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)

**(தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்) : ஒவ்வொரு மொழிப் பிரிவிலும் ஒவ்வொரு பரிசு**

2022 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கும் இடையில் பத்திரிகையொன்றில் தமது ஆக்கங்கள், கருத்துப்பட ஓவியங்கள் மற்றும் புகைப்படங்களின் பிரசுரங்களைக் கொண்ட விண்ணப்பதாரிகள் பத்திரிகையிலிருந்து பெறப்பட்ட தமது மூல ஆக்கங்கள், கருத்துப்பட ஓவியங்கள் அல்லது புகைப்படங்களை ஒவ்வொரு பிரிவுக்கும் தலா 5 வீதம் சமர்ப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மூல பத்திரிகை ஆக்கங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் பத்திரிகை ஆசிரியர் அல்லது பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரின் அத்தாட்சிப்படுத்தலுடன் ஆக்கத்தின் பிரதியை அனுப்ப பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**சுதந்திர நடுவர் குழுவினர் வெற்றியாளர்களைத் தெரிவு செய்வர்.**

**விண்ணப்ப முடிவுத் திகதி: வியாழக்கிழமை, ஆகஸ்ட் 31, 2023.**

**அனைத்து ஆக்கங்களும் சரியாக கோப்புருவாக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும். (தளர்வாக கட்டப்பட்ட பத்திரிகை ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ஆக்கங்கள் சகிதம் விண்ணப்பங்கள் குழுத் தலைவர், சிறந்த ஊடகவியல் விருதுகள் 2022, மேற்பார்த்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், 96, பெர்னார்ட் சொய்ஸா மாவத்தை ( கிருள வீதி), கொழும்பு 5 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.**

# போலி முகவர்கள் தொடர்பில் விழிப்பாக இருக்கவேண்டும்

எந்தவொரு வர்த்தக நடவடிக்கையையும் இலகுபடுத்த, முகவர்கள் நியமிக்கப்படுவது சாதாரணமாகிவிட்டது. அவர்கள்தான் ஒருசில சந்தர்ப்பங்களில் நுகர்வோருடனும், சில தருணங்களில் சில்லறை வர்த்தகர்களுடனும் நேரடியாக தொடர்பைக் கொண்டிருப்பர். நிறுவனங்களின் கிளைகளுக்கு அப்பால், முகவர் நிறுவனங்களே பரந்தளவில் இருக்கும்.

வர்த்தக நடவடிக்கைகளின் போது, மிகவும் இலகுவாகவும் சில்லறை வர்த்தக நிலையங்களுக்குத் தேவையான பொருட்களை, தாமதமின்றியும் விநியோகிப்பதற்கு முகவர்கள் முன்னின்று செயற்படுகின்றனர். அவ்வாறான முகவர்கள் சொற்ப தரகு பணத்துக்காக பகலிரவாக ஓடியோடி பணியாற்றுவர்.

எனினும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கீழ் இயங்கும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிலையங்களின் முகவர்கள், மூளைச் சலவைச் செய்வதில் கைதேர்ந்தவர்களாக இருக்கின்றனர். இதற்கிடையே போலி முகவர்களும் பணத்தைக் கறந்து ஏமாற்றுவதில் குறியாகவே இருந்து செயற்படுகின்றனர்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக அனுப்பும் முகவர்கள், தரகுப் பணத்தில் குறியாக இருப்பர். ஏனைய நாடுகளுக்கு வேலைவாய்ப்புகளுக்கு அனுப்புவதாகத் தெரிவிக்கும் போலி முகவர்கள், பல இலட்சம் ரூபாயை கறந்து ஏமாற்றிவிட்டு, நடுவீதிக்கு இழுத்துத் தள்ளிவிடுவர்.

மத்திய கிழக்கு நாடுகளைத் தவிர, ஏனைய நாடுகளுக்கு செல்லும் அவாவில் பல இலட்ச கணக்கில் பணத்தை இழந்து ஏமாந்தவர்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்துள்ளமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது. ஏமாற்றிய பலரும் தலைமறைவாகி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புகளுக்கு மட்டுமல்ல, கல்விப்பயில்வதற்கு செல்வதற்கும் சட்டரீதியிலான முறைமை இருக்கும் போது, போலி முகவர்களிடம் ஏமாறுவோர் இன்னும் இருக்கின்றனர்.

நுவரெலியா, லிந்துலை, கிளனிகல்ஸ் தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளியொருவர், வீடுகட்டும் கனவுடன் சவுதிக்கு பறந்து, சித்திரவதைக்கு உள்ளாகி, உடலில் குண்டூசிகள் ஏற்றப்பட்ட நிலையில், நாட்டுக்கு உயிருடன் திரும்பியுள்ளார். எவ்விதமான பயிற்சிகளும் மொழிப் பயிற்சியும் வழங்காது, முகவரால் அந்நாட்டுக்கு அப்பெண் அனுப்பிவைக்கப்பட்டு உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

உடல்ரீதியில் துன்புறுத்தப்பட்ட நிலையில், பணிப்பெண்கள் பலரும் கடந்தகாலங்களில் நாட்டுக்குத் திரும்பியுள்ளனர். சிலரின் சடலங்களும் கொண்டுவரப்பட்டுள்ளன. லிந்துலை பெண்ணுக்கு ஏற்பட்ட நிலைமையும் இறுதியாக இருக்காது.

ஆகையால், வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புகளைத் தேடுவோர், போலி முகவர்களிடம் சிக்கிக்கொள்ளாமல் விழிப்பாக இருக்கவேண்டும்.

நாட்டின் பொருளாதார நிலையால் தங்களுடைய வாழ்க்கையை கொண்டு நடத்துவதில் சிரமப்படும் பெரும்பாலானவர்களிடம், வெளிநாட்டு மோகம் ஆட்டுவித்துக் கொண்டே இருக்கின்றது. எனினும், அதற்காக அவசரப்பட்டு, போலி முகவர்களிடம் பணத்தை இழந்து நடுவீதியில் நிற்காது, சரியான பாதையை தேடிக்கொள்வது அவசியமாகும்.

பணிப்பெண்களைப் பொறுத்தவரையில், போதியளவான கல்வியறிவு அவர்களிடத்தில் இருக்காது. எனினும், ஆகக்குறைந்த பயிற்சிகள், வேலை செய்யும் வீட்டில் அன்றாடம் பயன்பாட்டுக்குரிய வகையிலான மொழிப்பயிற்சி ஆகியவற்றை போதித்து அனுப்ப வேண்டும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


## வாழ்வியல் தரிசனம்



அறியாமைகூட ஒரு போதை நிலைதான். ஒருவரின் அறியாமையை உணர்ந்தவர்கள், அவருக்கு உண்மை நிலையை உணர்த்தினாலும் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். புத்திமதி சொன்னவர்கள் மீது கோபப்படுவார்கள்.

இளம் வயதிலேயே, சில மூடநம்பிக்கைகளைச் சொல்லி வளர்க்கும்போது, அதை ஆழமாக உண்மை என நம்பிவிடுகின்றார்கள். படித்தவர்கள் கூட, சில தவறான கற்பனைக் கதைகளை நம்புவதுண்டு. ஏன், எதற்கு, எப்படி போன்ற கேள்விகளைக் கேட்டால்த்தான், எந்த விடயங்களிலும் தெளவுபிறக்கும்.

புத்திசாலிகளைக்கூட ஏமாற்றும் மனிதர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் நடிப்பதிலும் பேசுவதிலும் திறமையானவர்கள். இதனால், ஏமாறுபவர்கள் பின்நாள்களில் எவரையும் நம்பாமல் இருப்பதுண்டு.

துஷ்டர்களைக் கண்டால், விலகிவிடுவது நல்லது. எனினும் அப்பாவிகள் எதுவும் புரியாமல், தவறாகப் பேசினால் அதைப் பெரிதுபடுத்தலாகாது.

எமது முன்னோர்கள் அறிவுரீதியாக சொல்வதையும் சிலர் கேலியாக எடுத்துக் கொள்வதுண்டு. தங்கள் மூதாதையரிடம் கற்ற அனுபவங்களைச் சொல்வதை எடுத்தெறிந்து பேசக்கூடாது. எதையும் ஆழமாகச் சிந்திக்கவும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கிளிநொச்சி பொது வைத்தியசாலை

### பிரசவ அறை குளிரூட்டி பழுது

#### கர்ப்பிணிகள் பெரும் சிரமம்

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில், பிரசவ அறைக்கான குளிரூட்டி (A/C), கடந்த ஒரு வார காலத்துக்கும் மேலாக பழுதடைந்த நிலையில் காணப்படுவதால், பிரசவத்துக்காகச் செல்லும் கர்ப்பவதிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மல்லாவி, மாங்குளம், நட்டாங்கண்டல், விசுவமடு, உடையார்கட்டு, தருமபுரம் போன்ற பகுதிகளில் வாழும் கர்ப்பிணிகள், பிரசவத்துக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கே வருகின்றனர். கடந்த ஜனவரி மாதம் முதல், அதிகளவான பிறப்பு வீதத்தை பதிவுசெய்த வைத்தியசாலைகளில், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையும் ஒன்றாகத் திகழ்ந்தமை குறிப்படத்தக்கதாகும்.

இந்தநிலையில், மாவட்ட பொது வைத்தியசாலையின் மகப்பேற்று அறையின் குளிரூட்டி, அடிக்கடி பழுதடையும் போது, அதை அடிக்கடி சீர்செய்கின்ற போதும், மீளவும் சீக்கிரமாகவே பழுதடைந்து விடுகின்றது.

எனவே, கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் மகப்பேற்று அறையின் குளிரூட்டி உட்பட, ஏனைய அடிப்படை வசதிகளையும் சீர்செய்து கொடுப்பதற்கு, மருத்துவத் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யது பாஸ்கரன்

# ஜனாதிபதியின் இந்திய விஜயமும் இனப்பிரச்சினையும்



எம்.எஸ்.எம் ஐயூப்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை (வியாழக்கிழமை) இந்தியாவுக்கான இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை ஆரம்பிக்கவுள்ளார். ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், அவர் முதல்முறையாக இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்கின்றார்.

2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி, ஜனாதிபதியாக பதவியேற்று 10 நாள்களில் கோட்டாபய ராஜபக்‌ஷ இந்தியாவுக்கு விஜயம் செய்தார். கடந்த வருடம் ஜூலை மாதம் 20ஆம் திகதி, ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்ற வாக்கெடுப்பின் மூலம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். இந்த வருடம், ஜூலை மாதம் 20ஆம் திகதி, அவர் இந்த விஜயத்தை மேற்கொள்கிறார் என்பது முக்கியமானதாகும்.

இலங்கை பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்து, வங்குரோத்து நிலையை அடைந்து, மீண்டும் தலையைத் தூக்க, பெரும் முயற்சியை மேற்கொள்ளும் நிலையிலேயே, ஜனாதிபதியின் இந்த விஜயம் இடம்பெறுகிறது. எனவே, இந்த விஜயத்தின் போது, இலங்கையின் பொருளாதார விடயங்கள் முக்கியத்துவம் பெறும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவாநந்தாவும் ஜனாதிபதியின் தூதுக்குழுவில் உள்ளடக்கப்பட்டு உள்ளதால், இந்திய மீனவர்கள் வடபகுதி கடலில் அத்துமீறி மீன்பிடிப்பது தொடர்பான விடயமும், இருநாட்டு தலைவர்கள் இடையிலான பேச்சுவார்த்தைகளின் போது ஆராயப்படலாம்.

இலங்கை கடலில் மீன் பிடிக்கும் இந்திய மீனவர்களை சுடுவதற்கு, இலங்கை கடற்படைக்கு உரிமை இருக்கிறது என்று, பிரதமராக இருந்த ரணில், 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம், 'தந்தி' தொலைக்காட்சிக்கு அளித்த நேர்காணலில் கூறியிருந்தார். அந்த நிலையிலேயே, இந்தப் பிரச்சினை ஆராயப்படப் போகிறது.

ரணில் விக்கிரமசிங்க, ஆளும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவிலேயே கடந்த வருடம் ஜூலை மாதம் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். எனவே, அவர் பொதுஜன பெரமுனவின் பணயக்கைதியாக செயற்படலாம் என்றதோர் அபிப்பிராயம் நிலவியது.

இதன் காரணமாகவும் இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில், பொதுஜன பெரமுனவின் தலைவர்களின் நிலைப்பாட்டின் காரணமாகவும் அக்கட்சியின் சீன சார்பு நிலைப்பாட்டின் காரணமாகவும், ரணில் அக்கட்சியின் உதவியில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டமையை, இந்தியா அவ்வளவு விரும்பவில்லை என்றதொரு கருத்தும் ஆரம்பத்தில் நிலவியது.

எனினும், ரணில் மிகச் சாதுரியமாக அந்த நிலைமையை மாற்றியுள்ளார் போல்த்தான் தெரிகிறது. அதற்காக அவர், இலங்கையின் பொருளாதார நிலைமையையே உபயோகித்துள்ளார். வரலாறு காணாத மிக மோசமான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்த இலங்கை, அதிலிருந்து மீள்வதற்காக சகல நாடுகளினதும் உதவியைக் கோரியது. ஆயினும் இந்தியா தவிர்ந்த எந்த நாட்டில் இருந்தும் உருப்படியான உதவி கிடைக்கவில்லை.

மேற்காசிய அரேபிய நாடுகள் இலங்கைக்கு நீண்ட காலமாக உதவி வழங்கி வந்தன. ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் பெரும் நெருக்கடியை, இலங்கை அரசாங்கம் சந்தித்த பல சந்தர்ப்பங்களில், அந்நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகவே செயற்பட்டன. ஆயினும், ஜனாதிபதி கோட்டாபயவின் அரசாங்கம், முஸ்லிம்கள் விடயத்தில் பின்பற்றிய கொள்கை காரணமாக, குறிப்பாக கொவிட்-19 பெருந்தொற்றால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை எரித்ததன் காரணமாக, அந்நாடுகளும் பொருளாதார நெருக்கடியின் போது, இலங்கைக்கு உதவி வழங்க முன்வரவில்லை.

பொதுஜன பெரமுனவின் தலைவர்கள், ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் இருந்தே, சீனச் சார்பு கொள்கையை கடைபிடித்து வந்தனர். அவ்வாறிருந்தும், பொருளாதார நெருக்கடியை சந்தித்த இலங்கைக்கு, சீனா பெரிதாக உதவி செய்ய முன்வரவில்லை. அந்நாடு, சிறுசிறு உதவிகளையே வழங்கியது. சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை செய்து கொண்ட அதிகாரிகள் மட்ட உடன்பாட்டுக்கு, அந்நிதியத்தின் பணிப்பாளர் சபையின் அங்கிகாரம் கிடைப்பது தாமதமாவதற்கும் சீனாவே முக்கிய காரணமாகியது.

ஆனால், பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்த இலங்கைக்கு, இந்தியா உதவ முன்வந்தது. அது, இந்தியாவின் பூகோள அரசியலின் தேவையாக இருக்கலாம். ஆயினும், இலங்கையை பொறுத்தவரை, சாப்பாட்டுக்கே வழியில்லாமல் மக்கள் தவித்த போது இந்தியாவே உதவியது.

உலக வங்கி போன்ற சர்வதேச நிதி நிறுவனங்கள், 100 மில்லியன் டொலருக்கு குறைந்த கடன் வசதிகளை வழங்கிய கடந்த வருடத்தில், இந்தியா மட்டும் இலங்கைக்கு மூன்று பில்லியன் டொலருக்கு மேல் கடன் வழங்க முன்வந்தது. அத்தொகை சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு நான்கு வருடங்களுக்கு வழங்க முன்வந்துள்ள 2.9 பில்லியன் டொலரை விட அதிகமானதாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதிலும், சீனாவின் நிலைப்பாடு நீண்ட தாமதத்தை ஏற்படுத்தியது. கடந்த வருடம் செப்டெம்பர் மாதம், நாணய நிதியத்தின் அதிகாரிகள் இலங்கைக்கு 2.9 பில்லியன் டொலரை வழங்க முடிவு செய்தாலும், இலங்கையின் கடன்களை மறுசீரமைக்க கடன் வழங்கிய நாடுகள் இணங்கினால் மட்டுமே, அத்தொகை இலங்கைக்கு வழங்கப்படும் என கூறப்பட்டது.

இலங்கைக்கு வழங்கிய கடன்களை மறுசீரமைக்க, சீனா தயங்கியது. அதன் காரணமாக, ஏனைய நாடுகளும் நிறுவனங்களும் தயக்கம் காட்டின. ஆனால், இந்தியா ஆரம்பத்திலேயே இணக்கம் தெரிவித்தது மட்டுமல்லாது, ஏனைய நாடுகளை தூண்டியது.

இந்தியாவின் இந்த உதவிகளை, ரணில் அடிக்கடி நினைவூட்டினார். இவ்வருட மகளிர் தின வைபவத்தில் உரையாற்றிய அவர், இலங்கைக்கு பலர் உதவி செய்தாலும், உதவியவர்களில் மூன்று பெண்களை தாம் விசேடமாக நினைவுகூர்வதாகவும் அவர்களிலும் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் முக்கியமானவர் என்றும் கூறினார். அமெரிக்க திறைசேரி செயலாளர் ஜெனட் ஜெலன், சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா ஆகியோரே ஏனைய இரண்டு பெண்களாவர்.

இந்தியா தொடர்பான அவரது இது போன்ற புகழ்ச்சிகளால், அவர் தொடர்பாக இந்திய தலைவர்களிடையே ஏதாவது அதிருப்தி இருந்தால் அது களைந்திருக்கும். இந்த நிலையிலேயே அவரது இந்திய விஜயம் மேற்கொள்ளப்படுகிறது. அதேவேளை, ரணிலின் உலகக் கண்ணோட்டமும் இந்தியாவை கவர்ந்திருக்கும். மேற்குலகிடம் இருந்த உலக பொருளாதார ஆதிக்கம், தற்போது ஆசியாவை நோக்கி நகர்வதாக அவர் அடிக்கடி கூறுகிறார். அது, ஆசியா கண்டத்தின் பொருளாதார ஜாம்பவான்களாக இருக்கும் சீனாவினதும் இந்தியாவினதும் பொருளாதார மேலாண்மையை ஏற்கும் நிலைப்பாடாகும்.

ஐக்கிய தேசிய கட்சி, ஆரம்ப காலம் முதல் மேற்குலக வல்லாதிக்கத்தை ஏற்று, அதன் கொள்கைகளையும் சித்தாந்தங்களையும் பண்பாட்டு அம்சங்களையும் ஏற்றுக் கொண்ட கட்சியாகவே இருந்தது. ரணில் அந்நிலப்பாட்டை மிக இறுக்கமாக பின்பற்றியவர். ஆனால், மேற்குலகைப் பற்றிய அவரது அண்மைக் கால நிலைப்பாடானது, அதற்கு மாற்றமானதாகும்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு தொடர்பான பிரச்சினையில், ரணில் மேற்குலக நிலைப்பாட்டை ஏற்கவில்லை. சுவீடனில் குர்ஆன் பிரதி எரிக்கப்பட்ட சம்பவத்தின் போதும், மேற்குலக நாடுகள் கூறும் கருத்துச் சுதந்திரத்தை அவர் ஏற்கவில்லை.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதி கோட்டாபய, இந்தியாவுக்கு விஜயம் செய்யும்முன்னர், இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் இலங்கைக்கு விஜயம் செய்ததைப் போல், ஜனாதிபதி ரணிலின் இந்திய விஜயத்துக்கு முன்னர், இந்திய வெளியுறவு செயலாளர் வினாய் மோகன் குவட்ரா கடந்த 11 ஆம் திகதி இலங்கைக்கு வந்து, பாதுகாப்பு அமைச்சில் வைத்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார். அத்தோடு அவர், ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஆலோசகர் சாகல ரத்நாயக்கவையும் சந்தித்தார்.

இந்திய வெளியுறவு செயலாளர், பாதுகாப்பு அமைச்சில் ஜனாதிபதியை சந்தித்ததிலும் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகரை சந்தித்ததிலும் ஏதாவது முக்கியத்துவம் இருக்கிறதா என்பது இன்னமும் தெளிவாகவில்லை.

இதேவேளை, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால பாக்லே, இரா. சம்பந்தனையும் எம்.ஏ சுமந்திரனையும் சந்தித்துள்ளார். ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் போது, இலங்கையின் இனப்பிரச்சினையும் ஆராயப்படலாம் என்பதையே இச்சந்திப்புகள் எடுத்துக் காட்டுகின்றன.

ஆயினும், அது தமிழ் மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை வழங்கிய நிலையிலன்றி, இந்திய, இலங்கை அரசாங்கங்களின் நலன்களுக்கு முன்னுரிமை வழங்கிய நிலையிலேயே ஆராயப்படும் என்பதை வரலாறு உணர்த்துகிறது. எனவே, தமிழ்த் தலைவர்கள் அந்த விடயத்தில் பெரும் நம்பிக்கையை வைத்திருப்பதில் அர்த்தம் இல்லை.

2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம், இந்தியாவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி கோட்டாபய, அங்கிருந்தவாறே அதிகார பரவலாக்கலுக்கு எதிராக கருத்து வெளியிட்டார். ஆனால், ரணில் அதிகார பரவலாக்கலை ஆதரித்தே கருத்து வெளியிட்டு வருகிறார். அவர், இந்திய தலைவர்களை சந்தித்து, அது தொடர்பாக நம்பிக்கையளிக்கும் பல கருத்துகளைத் தெரிவிக்கலாம். ஆனால், அவரும் இனப்பிரச்சினை விடயத்தில், எந்தவொரு உருப்படியான நடவடிக்கையையும் எடுக்கப் போவதில்லை என்பது, அவரது அண்மைய நடவடிக்கைகள் மூலம் தெரிகிறது.



வெளிநாட்டு வேலைவாய்ப்பு மாயை:

# மனித கடத்தல்கள்



சுப்பிரமணியம் பாஸ்கரன்

உலகளாவிய ரீதியில் மிகப்பெரிய குற்றமாக கருதப்படும் போதைப்பொருள் வியாபாரத்துக்கு அடுத்தபடியாக, மனித கடத்தல்கள் காணப்படுகின்றன.

இந்த மனித கடத்தல், பல்வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்படுகின்றன. குறிபாக சிறுவர்கள் கடத்தப்படுதல், வெளிநாடுகளுக்கு வேலைக்கான ஆட்களை கடத்துதல், பாலியல் நோக்கத்துக்காக அல்லது பாலியல் வியாபாரத்துக்காகப் பெண்களை கடத்துதல் எனப் பல்வேறு வடிவங்களில் மனிதக் கடத்தல்கள் உலகில் இடம்பெறுகின்றன.

இவ்வாறு, மனித கடத்தல்களில் உலக அளவில் சிறுவர் கடத்தல்களே அதிகளவில் காணப்படுகின்றன. குறிப்பாக இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் அதிகளவில் சிறுவர் கடத்தல் சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன.

வருடம் தோறும் 1.2 மில்லியன் குழந்தைகள் கடத்தப்படுவதாகவும் இதன் மூலம் ஒவ்வோர் ஆண்டும் உலக அளவில் 150 பில்லியன் அமெரிக்க டொலர் ஈட்டித் தரும் ஓர் இலாபகரமான தொழிலாகவும் காணப்படுவதாக உலகளாவிய ரீதியில், கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் மூலம் அறிய முடிகின்றது. இலங்கையில் சிறுவர் கடத்தல்கள் என்பது இல்லாவிட்டலும், ஆட்கடத்தல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

அதாவது, இலங்கையை பொறுத்தவரையில், வெளிநாடுகளுக்கு படகுகள் மூலம் ஆட்களை கடத்தும் சம்பவங்கள், அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன. தற்போது இலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடி, பொருட்களின் விலை ஏற்றம், வறுமை என்பவற்றின் காரணமாக, தொழில் தேடி வெளிநாடுகளுக்கு செல்வோரின் எண்ணிக்கை, நாளுக்கு நாள் அதிகரித்து காணப்படுகிறது.

இவ்வாறு வெளிநாடுகளுக்கு செல்வோர், சட்டரீதியாகவும் பாதுகாப்பாகவும் வெளிநாடுகளுக்குச் செல்கின்றார்களா? அல்லது, வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடாக விண்ணப்பங்களை செய்து அதனூடாக செல்லுகின்றார்களா? அல்லது, சரியான முகவர்களைத் தொடர்பு கொண்டு செல்லுகின்றார்களா என பல்வேறுபட்ட கேள்விகள் காணப்படுகின்றன.

குறிப்பாக, உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட கொவிட்-19 பெருந்தொற்று, இன்றைய பொருளாதார நெருக்கடி, வறுமை போன்ற இன்னல்கள் காரணமாக, ஏழை மக்களின் பொருளாதாரம் முற்றிலும் பாதிப்புக்கு உள்ளாக்கியதுடன், அவர்கள் ஏமாற்று பேர்வழிகளை நம்பி, கடத்தப்படுவதற்கான சூழல் அதிகரித்துள்ளது.

இவ்வாறான சூழலில், மக்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி, இவ்வாறான ஆட்கடத்தல்களை தடுப்பதற்கான வழிமுறைகளை, சகல தரப்பினரும் முன்னெடுக்க வேண்டியது, இன்றைய காலத்தின் அவசியமாகும்.

கடந்த காலங்களில், இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில், உயிர் அச்சுறுத்தல்கள் காரணமாக, வெளிநாடுகளுக்கு சட்ட விரோதமாக சென்றிருந்தாலும், இப்போது தொழில் தேடி வெளிநாடுகளுக்கு செல்வோரின் எண்ணிக்கை அதிகளவில் காணப்படுகின்றது.

இவர்கள் தங்களுக்கான உரிய பாதுகாப்பின்றி, பலரது ஆசை வார்த்தைகளை நம்பி, குழந்தைகள், குடும்பம், உறவினர் என அனைவரையும் மறந்து, சட்ட விரோதமாக படகுகள் மூலம், ஆட்கடத்தலில் ஈடுபடும் கடத்தல் காரர்களை நம்பி, வெளிநாடுகளுக்கு செல்லுதல் மற்றும் போலி முகவர்களின் ஆசை வார்த்தைகளை நம்பி, அவர்களூடாக வெளிநாடுகளுக்கு செல்ல முயல்வது போன்றவை, இலங்கையில் அதிக அளவில் காணப்படுகின்றன.

குறிப்பாக, வடக்கு - கிழக்கை பொறுத்தளவில் இந்த நிலைமைகள் அதிகளவில் காணப்படுகின்றன. வெளிநாடுகளில் வேலைவாய்ப்புகளை பெற்றுத் தருவதாகக் கூறுபவர்களை நம்பி, பெருந்தொகையான நிதியைச் செலவிட்டு, அதாவது தங்களிடம் இருக்கின்ற சொற்ப சொத்துகளை விற்றும் ஈடுவைத்தும் அந்தத் தொகையைக் கொடுக்கின்றார்கள். உதாரணமாக, ஆட்கடத்தல்காரர்களின் பசப்பு வார்த்தைகளை நம்பி, வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளுக்காக, தாங்கள் குடியிருக்கின்ற காணிகளை ஈடு வைத்து அல்லது, விற்பனை செய்து, நிதியைக் கொடுத்து, தமது குடும்பங்களை நிற்கதியான நிலைக்குள் தள்ளிவிட்டு, வீதியில் பரிதவிக்கின்ற நிலைமை, இப்போது பல இடங்களில் சம்பவிக்கிறது.

அண்மையில், யாழ்ப்பாணத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர், போலி முகவர் ஊடாக, வெளிநாட்டுக்கு சென்ற சமயம் கைது செய்யப்பட்டு, வெளிநாட்டில் தடுப்பு முகாம் ஒன்றில் தடுத்து வைத்திருந்த போது, அவர் அங்கே உயிரிழந்துவிட்டார். அவரது சடலத்தை இலங்கைக்கு கொண்டு வருவதற்குக் கூட, முடியாத நிலையில் உறவினர்கள் பலரிடம் உதவி கேட்டு, பல தொண்டர்கள், தொண்டு அமைப்புகளினுடைய உதவியோடு, அவரது சடலம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது.

இதைவிட ஓமான், மத்திய கிழக்கு நாடுகளுக்கான போலி முகவர்கள், கிராமப்புற பெண்களை குறிவைத்து, சிறந்த தொழில் வாய்ப்பு பெற்று தருவதாகக் கூறி, பெரும்பாலான பெண்கள் அனுப்பப்பட்டு ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். பலர் வெளிநாடுகளில் உள்ள முகவர் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டு, சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதாக அவர்களது உறவினர்கள் மற்றும் முகநூல் பதிவுகளில் பதிவிட்டிருப்பதையும் காணமுடிகின்றது.

இலங்கையில் சேவையாற்றுகின்ற பல அரச சார்பற்ற தொண்டு அமைப்புகள், விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன. அதுமட்டுமல்லாது, கடத்தல்காரர்களால் ஏமாற்றப்பட்டவர்களுக்கான சட்ட உதவிகளையும் வழங்கி வருகின்றன.

இலங்கையில் இப்போதுள்ள வறுமை நிலைமையை ஆட்கடத்தல்காரர்களும் போலி முகவர்களும், சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றார்கள். இவர்களால் மக்கள் ஏமாற்றப்படுவதைத் தடுப்பதற்கான வழிவகைகளில் ஒன்றாக, தொழில் வாய்ப்புகளை தேடி செல்பவர்கள், போலி முகவரிகள் ஊடாக வெளிநாடு செல்வது தொடர்பான விழிப்புணர்வுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

அத்துடன், போலி முகவர்களை எவ்வாறு அடையாளம் காண்பது? நம்பிக்கையான முகவர்களை நாடுவது எவ்வாறு? சாதாரணமாக, அரபு நாடுகளுக்கு தொழில் வாய்ப்புப் பெற்றுச் செல்வதற்கான வழிமுறை என்ன? அதற்கான செலவுகள் எவ்வாறு அமையும் போன்றவை தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட வேண்டியது அவசியமாகும்.



பல்கலைக்கழக மாணவர்களின்

# தடைகளைக் கடந்த இலட்சிய பயணம்



ச. தனுஷ்கா
யாழ். பல்கலைக்கழகம்,
ஊடகக் கற்கைகள் துறை

உயர்தரத்தை நிறைவு செய்த ஒவ்வொரு மாணவரினதும் கனவாக, பல்கலைக்கழகம் செல்வது காணப்படுகிறது. இதுநாள் வரையிலும் பெற்றோரின் பாதுகாப்புடனும் அவர்களது வழிநடத்தலுடனும் தமது வாழ்க்கையை வாழ்ந்த மாணவச்செல்வங்கள், தமது பட்டப்படிப்புக்காக பல்வேறு பிரதேசத்தில் இருந்து வருகின்ற மாணவர்களுடன் இணைந்து, தமது கற்றலை மேற்கொள்கின்றனர்.

பாடசாலை காலங்களில் ஆசிரியர்கள் வழங்கும் அறிவுறுத்தல்கள், ஆலோசனைகளில் தவறாத ஆலோசனைகளில் ஒன்றாக, "நன்றாகப் படித்தால் பல்கலைக்கழகம் செல்லலாம்; சிறந்த எதிர்காலம் அமையும்" என்பதாகும். அவ்வகையில் வாழ்க்கையில் மிக முக்கியமான காலமாக பல்கலைக்கழக காலம் அமைகிறது. பட்டப்படிப்பை நிறைவு செய்தபின், ஏதேனும் ஒரு தொழிலுக்கு விண்ணப்பித்து வாழ்வில் கரைசேர்வதே ஒவ்வொரு பல்கலைக்கழக மாணவரினதும் கனவாகவுள்ளது.

பல்கலைக்கழகம் எத்தகைய நன்மைகளை தன்னகத்தே கொண்டிருந்தாலும், அதேசமயம் வெளிக்கொணராத பல சோதனைகளையும் சவால்களையும் கொண்டுள்ளது. பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களும் ஒரே விதமான பின்னணியை உடையவர்கள் அல்ல. அந்தவகையில் பொருளாதாரம், அடிப்படைத்தேவைகள், உளப்பாங்கு போன்ற அனைத்தும் மாணவருக்கு மாணவர் வேறுபடும்.

அதற்கேற்ற வகையில் மாணவர்கள் பல சவால்களுக்கு முகம் கொடுக்கின்றார்கள். குறிப்பாக, இலங்கையில் கல்வி கற்கும் பல்கலைக்கழக மாணவர்கள், கடந்த இரண்டு ஆண்டுகளாக பல சவால்களுக்கு மத்தியிலேயே தமது பட்டப்படிப்பை தொடர்கின்றனர்.

இலங்கையில் அடுத்தடுத்து ஏற்பட்ட அசௌகரியமான நிகழ்வுகள், பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களிடத்தே பெரும் தாக்கங்களை ஏற்படுத்தின. முதலாவது அடியாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அமைந்தது. இச்சம்பவத்தை அடுத்து நாடுபூராகவும் அனைத்து பல்கலைக்கழகங்களும் தமது கல்வி நடவடிக்கைகளை முடக்கின. பல பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டன. இவ்வதிர்ச்சியில் இருந்து மீண்டு வருவதற்குள், அடுத்து கொவிட் - 19 பெருந்தொற்றானது முழு உலகையும் ஸ்தம்பிக்கச் செய்தது.

பாதுகாப்பு காரணமாக, பட்டப்படிப்பு நடவடிக்கைகள் அனைத்தும் இணையவழி மூலம் நிகழ்நிலைக் கல்வியினூடாக மாணவர்கள் தமது கற்றலை மேற்கொண்டனர். அனைத்து மாணவர்களாலும் நிகழ்நிலைக் கல்வியை அணுக முடியவில்லை. அதற்கான அடிப்படை வசதிகளான கணினி, இணையம் போன்றவை மாணவர்களிடம் காணப்படவில்லை.

நேரடிக் கல்வியினூடாக பெற்றுக்கொள்ளும் அனுபவத்தையும் புரிதலையும் மாணவர்களால் பெறமுடியவில்லை. கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மாணவர்களைத் தளர விடவில்லை என்றே கூற வேண்டும். பாடவிதானங்களில் குழப்பங்கள் தீர முன்னரே, மாணவர்கள் தேர்வெழுதினர்.

கடும் போராட்டங்களை கடந்து ஒருவழியாக பல்கலைக்கழகத்திற்கு நேரடியாக கற்றல் நடவடிக்கையில் ஈடுபடலாம் என்ற ஆறுதலுடன் மாணவர்கள் இருக்க, அடுத்த பிரச்சினையாக உருவெடுத்தது இலங்கையின் பொருளாதார நெருக்கடி. இதன் பொருட்டு நாடுபூராகவும் பலர் ஆட்சிக்கு எதிராகவும் ஜனாதிபதிக்கு எதிராகவும் போராட்டங்களை முன்னெடுத்தனர். குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்களே இதில் முனைப்பாகச் செயற்பட்டனர்.

வாழ்க்கைச் செலவீனங்கள் அதிகரித்த நிலையில் அடிப்படை அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரித்தன; தட்டுப்பாடுகள் நிலவின; அனைத்து கட்டணங்களும் அதிகரித்தன. குறிப்பாக, பல்கலைக்கழக மாணவர்கள் இச்சூழ்நிலையில் பெரும் அசௌகரியங்களை சந்திக்க நேரிட்டது. மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவித்தொகையான மகாபொல பணம் முடக்கப்பட்டது. பல மாதங்களாக மாணவர்களுக்கு உதவித்தொகை வரவு வைக்கப்படவில்லை. மாணவர்கள் அன்றாடம் நுகரும் உணவுப்பொருட்களை பாண், தேநீர், மதிய உணவு போன்றவற்றின் செலவீனங்கள் அதிகரித்தன.

மாணவர்களது போக்குவரத்து கட்டணங்கள் அதிகரித்தன. அதேவேளை மின்வெட்டுகள் தொடர்ச்சியாக காணப்பட்டது. சுமார் 12 மணிநேர தொடர்ச்சியான மின்வெட்டுகளும் நாட்டில் பதிவாகியமை குறிப்பிடத்தக்கது. மாணவர்களது கல்வி நடவடிக்கைக்கு எந்தவொரு சாதகமான சூழ்நிலைகளும் அமைந்திருக்கவில்லை.

மலையக பிரதேசத்தை சேர்ந்த மாணவர்களும் பிற வறுமை கோட்டின் கீழ் உள்ள மாணவர்களும், கடும் சவால்களை எதிர்நோக்குகின்றனர். குடும்பத்தாரிடம் பணத்தை கேட்க முடியாது; தமது அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது தவித்தனர். அரசினால் வழங்கப்படும் இலவசக்கல்வியைக்கூட ஆடம்பரமாக தனியார் கல்வி நிறுவனத்தில் படிப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தியது. மாணவர்களால் தமது செலவுகளை ஈடுசெய்ய முடியாத நிலை தோன்றியது. இன்னும் இப்பொருளாதார நெருக்கடியின் விளைவுகளில் இருந்து பல மாணவர்கள் மீண்டு வரவில்லை.

எதிர்பாராமல் ஏற்பட்ட இந்த அசௌகரியமான சூழ்நிலைகளால், மாணவர்களது பட்டப்படிப்பு கற்றல் காலம் உரிய காலத்தை விட பின்தள்ளப்பட்டது. நான்கு வருட சிறப்பு கற்கைகள் ஐந்து, ஆறு வருடங்களாக பின்தள்ளப்பட்டது மறுக்கமுடியாத உண்மையாகும்.

மாணவர்களது வயது, அவர்களது காலம் வீணடிக்கப்பட்டது. மேலும் விரிவுரையாளர்களது பணிப்புறக்கணிப்பும் மாணவர்களது கற்றலில் தாக்கத்தை ஏற்படுத்தியது. இலங்கை அரசாங்கம் அமல்படுத்திய வரிக்கொள்கைக்கு கண்டனம் தெரிவித்து பலர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதன்போது பல்கலைக்கழக மாணவர்களது விரிவுரைகள் ஸ்தம்பித்தன.

இவ்வாறு, பல்கலைக்கழகங்களில் உள்வாரியாக தமது கல்வியை தொடரும் ஒவ்வொரு மாணவனும் கடந்த இரண்டு ஆண்டுகளாக தமது கற்றலை பெரும் சவால்களுக்கு மத்தியிலேயே தொடர்ந்தனர். இந்நிலையிலிருந்து மாணவர்கள் இன்னும் பூரணமாக வெளிவரவில்லை.

மற்றுமொரு பாரிய சமூகப் பிரச்சினையாக, மாணவர்களது கல்வி அழுத்தம் காணப்படுகிறது. இதனால் பல மாணவர்கள் உளரீதியான அழுத்தங்களுக்கு, நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இதன் உச்சக்கட்ட விளைவாக மாணவர்கள், தன்னுயிர் மாய்த்தல் என்னும் அவல நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

மாணவர்கள் உளநல பாதிப்புகளால் அழுத்தங்களுக்கு உள்ளாவதும், முடிவெடுக்க முடியாமல் தடுமாறுவதும் இதனால் தவறான முடிவுகளை கையாள்வதும் அண்மைக்காலங்களில் அச்சுறுத்தலுக்குரிய விடயங்களாக உருவெடுத்துள்ளன. இதனை சரியான முறையில் அணுக வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

அறிவு, திறன்கள், மனப்பாங்கு, செயற்பாடுகள், பண்புகள், பாடரீதியான அடைவுகள் என அனைத்தும் மாணவர்களிடமும் ஒரே மாதிரியாக காணப்பட வேண்டும் என எதிர்பார்ப்பது இயற்கைக்கு முரணானதாகும்.

ஒருவரை இன்னொருவருடன் ஒப்பிட்டுப் பார்ப்பதும், பரீட்சைகளில் கூடுதலான பெறுபேறுகளைப் பெறவில்லை, கல்வி சார்ந்த நடவடிக்கைகளில் பின்தங்கி இருப்பின் அம்மாணவர்களை அவமானப்படுத்தல் போன்ற செயற்பாடுகள், மாணவர்களை நிர்க்கதி அற்றவர்களாக மாற்றிவிடும்.

ஒரு மாணவன் கற்றலில் இடர்படுவதற்கான காரணங்களை இனங்கண்டு, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், விரிவுரைகளிலும் பெற்றோர் முன்னிலையிலும் தகாத வார்த்தைப் பிரயோகம், தண்டனைகளை வழங்குதல், விரிவுரைகளுக்கு தடை விதித்தல் போன்றவை பாரதூரமான விளைவுகளை மாணவர்களிடத்தில் ஏற்படுத்தக் கூடும்.

பொருத்தமற்ற கற்பித்தல் முறைகள் காரணமாகவும் பல்கலைக்கழகங்களிலும் வீட்டிலும் காணப்படும் அழுத்தங்கள், அவமதிப்பு என்பன மாணவர்களை தன்னம்பிக்கை இழக்கச் செய்வதுடன், தனக்கும் படிப்புக்கும் பொருத்தமற்றது என்ற தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்துவதுண்டு.

பல்கலைக்கழக சூழல் என்பது, வெறுமனே ஒரு பாடத்துக்கான மாணவர்களுடனும் அதனுடன் தொடர்புடைய விரிவுரையாளர்களுடனும் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டது அல்ல.

மாறாக, பல்வேறு இடங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் ஒன்றித்து இருக்கும் ஒரு கல்விக் கூடமாகும். ஒரு மாணவன் அவமானப்படுத்தப்படும் போது, சங்கடப்படுமாறு ஏதேனும் சூழல் அமையும் பட்சத்தில், குறித்த மாணவனை பல்கலைக்கழக மாணவர்களும் அவமானப்படுத்துவது போன்ற உணர்வையே அளிக்கும். எனவே, விரிவுரையாளர்களுக்கு பாரியதொரு பொறுப்புணர்வும் கடமைப்பாடும் உண்டு. மாணவர்களை உரிய முறையில் அணுகி அவதானமாக செயற்பட வேண்டும்.

மாணவர்கள் ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு பிரச்சினையுடன் தமது கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். வெளியில் புன்னகை முகத்துடன் விரிவுரையாளர்களையும் நட்பு வட்டாரங்களையும் கடந்து செல்லும் அம்முகங்களுக்கு பின்னால் ஆயிரம் சுமைகளுடன் கூடிய வலிகள் காணப்படும். இவற்றில் சிலர் வெளிப்படையாக கூறுவர்; வேறு சிலர் உள்ளுக்குள்ளே வைத்து மன அழுத்தங்களுக்கு உட்படுவர்.

பல பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்கு அதிகமான கட்டுப்பாடுகளும் இறுக்கமான விதிமுறைகளும் அமைவதுண்டு. இவை மாணவர்களின் ஒழுக்க நடவடிக்கைகளுக்கானது என்பதற்கு அப்பால், மாணவர்களை அழுத்தத்திற்கு உள்ளாக்கும் என்பதிலும் கரிசனை கொள்ள வேண்டும். வளமான எதிர்காலத்துக்காக தேர்வில் நல்ல மதிப்பெண் பெற வேண்டும் என்ற அழுத்தம் மாணவர்களுக்கு தொடர்ந்து தரப்படுகிறது. இதனால் பல மாணவர்களது உறக்கத்தில் ஏற்படும் மாற்றங்கள், பசியின்மை, உற்சாகமின்மை போன்ற மன உளைச்சலின் ஆரம்ப அறிகுறிகள் தோன்றுகிறது.

கல்வி தொடர்பான மன உளைச்சலை எதிர்கொள்வதற்கான சிறந்த வழிமுறைகளாவன:

ஆரோக்கியமான உத்திகளான கலை, விளையாட்டுகளில் ஈடுபடுதல், இசை நிகழ்வுகளில் பங்கு கொள்ளல், இசைத்தல், படைப்பாக்கம் மிகுந்த விடயங்களில் ஈடுபடல் மாணவர்களிடையே நிலவும் மன அழுத்தத்தை குறைக்கும் என பல ஆய்வுகள் கூறியுள்ளன. உடற்பயிற்சி மற்றும் தியானங்களில் ஈடுபடுவது, குடும்ப உறுப்பினர்கள், நண்பர்களுடன் உரையாடுவது ஆகியவை மன அழுத்தத்தை எதிர்கொள்ள சிறந்த வழிகளாகும்.

மாணவர்கள் எதிர்மறை உத்திகளை தவிர்க்க வேண்டும். மன அழுத்தத்தை எதிர்கொள்ள போதைமருந்துகள் உட்கொள்வது, மது அருந்துவது, தன்னைத்தானே தாக்கி கொள்வது, அதிகமாக அலைபேசி பயன்படுத்துவது மாணவர்களின் பழக்க வழக்கங்களை சிதைக்கின்றன.

மிக முக்கியமான விடயமாக, பல்கலைக்கழக மாணவர்கள் எப்போதும் தொழில் வாழ்க்கை குறித்து மாற்று விருப்பங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

பெரும்பாலும் மாணவர்கள் ஒற்றை இலட்சியத்தைக் கொண்டிருக்கின்றார்கள். கல்வி, கல்லூரி, பல்கலைக்கழகம், பட்டம், நுழைவுத்தேர்வு மட்டுமே அவர்களது இலட்சியங்களாக இருக்கின்றன. இதுபோன்ற ஒற்றை இலட்சியத்தால், 'கறுப்பு-வெள்ளை', 'எல்லாம் அல்லது ஒன்றும் இல்லை' என்று சிந்திக்க தலைப்படுகின்றனர். பலர் மாற்று வாய்ப்புகளை யோசிப்பதே இல்லை. தங்களுக்கு கிடைக்கும் தெரிவுகளையும் அவர்கள் சுருக்கிக் கொள்கின்றார்கள். இவை மாணவர்களுக்கான சாதகமான சூழ்நிலை இல்லாதபோது, அவர்களுக்குள் ஓர் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது.

இவ்வாறு பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் ஒவ்வொரு மாணவனும் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்கின்றான். மன அழுத்தம், கல்வி நெருக்கடி, நிதிப்பற்றாக்குறை, குடும்ப பிரச்சினைகள், அரசாங்கத்தின் நெருக்கடிகள், மாற்றமுறும் காலநிலையும் அபாயங்களும், உலகதொற்று நோய்களின் தாக்கம் போன்றவை மாணவர்களது கல்வியை சுமையாக்கின்றன.

சாதிக்கும் கனவுகளை சுமந்து கொண்டு, பல்கலைக்கழகத்தில் அடியெடுத்து வைத்த மாணவர்கள் சொல்லானா துயரங்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் தமது கல்வியை தொடர்கின்றனர். இலட்சியத்தை மனதில் உறையச்செய்த வண்ணம் பசி, தூக்கம் பாராது குடும்பத்தின் சுமைகளுடன் தமது கல்விச்சுமையையும் சுமந்து செல்கின்றனர் பல்கலைக்கழக மாணவர்கள்!

# ஊழலை ஊக்குவிக்கவே எதிர்க்கட்சிகள் கூடுகின்றன



நாட்டில் ஊழலை ஊக்குவிப்பதற்காகவே எதிர்க்கட்சிகள் ஒன்று கூடுகின்றனர். சில கட்சிகள் தங்களின் குடும்பத்துக்கான வளர்ச்சியை மட்டுமே விரும்புகின்றன என்று தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, 2024இல் பாரதிய ஜனதாவை மீண்டும் ஆட்சியில் அமர்த்த மக்கள் முடிவு செய்து விட்டனர் என்றார்.

ஜனநாயகம் என்பது மக்கள்; மக்களால்; மக்களுக்கானது. ஆனால், பரம்பரை அரசியல் கட்சிகளுக்கு அது குடும்பம்; குடும்பத்தினரால்; குடும்பத்தினருக்காகது. முதலில் குடும்பம்தான். நாட்டிற்காக ஒன்றுமில்லை. இதுதான் அவர்களது முழக்கம். அங்கே வெறுப்பு, ஊழல், திருப்திபடுத்தும் அரசியல் உள்ளது. வாரிசு அரசியலால் நாடு சீரழிந்துள்ளது. அவர்களுக்கு, அவர்களுடைய குடும்ப வளர்ச்சி மட்டுமே முக்கியம். நாட்டில் ஏழை மக்கள் குறித்து அல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்துக்கு அடுத்த ஆண்டு ஏப்ரல் அல்லது மே மாதம் தேர்தல் நடைபெற உள்ளது. இந்தத் தேர்தலை எதிர்கொள்ள பாரதிய ஜனதா கட்சிக்கு எதிராக, பலமான கூட்டணியை அமைக்க பெங்களூரில் எதிர்க்கட்சிகளின் கூட்டம் செவ்வாய்க்கிழமை (18) நடந்தது.

# அப்படிக்கூறக்கூடாது என்றதற்கு கண்டனம்



காலையிலேயே மது குடிப்போரை குடிகாரர்கள் என்று சொல்லக் கூடாது என அமைச்சர் முத்துசாமியின் பேச்சுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கடுமையான பணி செய்வோர் காலையில் மது குடிப்பதாகவும், அவர்களை குடிகாரர்கள் என்று சொல்லக் கூடாது எனவும் அமைச்சர் முத்துசாமி தெரிவித்திருந்தார்.

அமைச்சரின் இந்தப் பேச்சு வருத்தம் அளிப்பதாக கூறியுள்ள பா.ஜ.க மாநில தலைவர் அண்ணாமலை, மது குடித்துவிட்டு கழிவுகள் அகற்றும் பணியில் ஈடுபடச் சொல்கிறாரா எனக் கேள்வி எழுப்பினார்.

பா.ம.க தலைவர் அன்புமணி ராமதாஸ், அமைச்சர் முத்துசாமி சமூக நீதிதான் பேச வேண்டுமே தவிர, குடிநீதி பேசக் கூடாது என்று தெரிவித்துள்ளார். நாற்றத்தை மறக்க மது என்றால், அதை விட கொடிய நாற்றத்துடன் மதுவை குடித்து வரும் கணவனை சகித்துக் கொள்ள முடியாமல் மனைவிகள் அனுபவிக்கும் கொடுமைகளுக்கு அமைச்சர் என்ன தீர்வு வைத்திருக்கிறார்? என்றும் வினவினார்.

# அரைநிர்வாண புகைப்படத்தை 50 ரூபாய்க்கு விற்றவர் கைது

அரைநிர்வாண புகைப்படத்தின் விலை 50 ரூபாய், முழு நிர்வாண புகைப்படத்தின் விலை 100 ரூபாய், வீடியோக்கள் ரூ 1,000 என பெண்களின் புகைப்படங்களை சமூக வலைதளங்களில் விற்பனைச் செய்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னை ஆதம்பாக்கத்தை சேர்ந்த 21 வயது நிரம்பிய இளம்பெண் பொலிஸில் செய்த முறைப்பாட்டில், தனது புகைப்படத்தை சிலர் ஆபாசமாக சித்திரித்து டெலிகிராமில் பணத்துக்கு விற்பனை செய்துள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

2022ஆம் ஆண்டு தீபாவளிக்காக துணி எடுத்தபோது, தனக்குத் தெரியாமல் எடுக்கப்பட்ட புகைப்படத்தை ஆபாசமாக சித்திரித்து, சமூக வலைதளங்களில் விற்பனை செய்து வரும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென முறைப்பாட்டில் கேட்டுக்கொண்டுள்ளார்.

விசாரணையில் 22 வயதான இளைஞன் சிக்கிக்கொண்டார். அவர், ஐடி பி.டெக் படிப்பை முடித்துள்ளார்.

ரஷ்யா

# கருங்கடல் தானிய ஒப்பந்தத்தில் இருந்து ரஷ்யா விலகல்

உலகளாவிய உணவு நெருக்கடியைத் தணிக்கும் நோக்கத்துடன் 'கருங்கடல் தானிய ஒப்பந்தம்' ஏற்படுத்தப்பட்டது.

தானியங்களை பெருமளவில் ஏற்றுமதி செய்யும் நாடு உக்ரைன். உலகின் பல நாடுகள் உக்ரைனின் தானியங்களை பெரிதும் நம்பியிருக்கின்றன. ரஷ்ய-உக்ரைன் போரில் உக்ரைனின் துறைமுகங்கள் ரஷ்யாவால் கைப்பற்றப்பட்டன. இதனால் தானிய ஏற்றுமதி குறைந்து மிக பெரிய உணவு நெருக்கடி உருவாகியது.

இதனால் கடந்த வருடம் ஜூலை மாதம் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் துருக்கியின் முயற்சியால் ரஷ்யா-உக்ரைன் மோதலால் தேக்கி வைக்கப்பட்ட உக்ரைனிய தானியங்களை பாதுகாப்பாக ஏற்றுமதி செய்ய அனுமதிப்பதன் மூலம் உலகளாவிய உணவு நெருக்கடியைத் தணிக்கும் நோக்கத்துடன் 'கருங்கடல் தானிய ஒப்பந்தம்' எற்படுத்தப்பட்டது.



அந்த உடன்படிக்கையில் சில நிபந்தனைகளுடன் ரஷியா பங்கேற்றது.

இந்த ஒப்பந்தம் காலாவதியாகி மீண்டும் இரண்டு முறை புதுப்பிக்கப்பட்டது. கருங்கடல் தானிய ஒப்பந்தத்தை நீட்டிப்பதற்கான நிபந்தனைகள் நிறைவேற்றப்படவில்லை என்று பல மாதங்களாக ரஷ்யா கூறி வந்தது.

இந்நிலையில் மூன்றாவது முறையாக காலாவதியாக இருந்தது. ரஷ்யா தொடர்பான கருங்கடல் நிபந்தனைகள் இதுவரை செயற்படுத்தப்படவில்லை. எனவே அதிலிருந்து விலகுவதாக அறிவித்து உள்ளது.

# சபாநாயகரும் பெண் எம்.பியும் தகாத உறவால் இராஜினாமா

தகாத உறவு காரணமாக பாராளுமன்றத்தின் சபாநாயகரும், அந்த பாராளுமன்றத்தின் பெண் எம்.பியும் இராஜினாமா செய்துள்ளனர். இந்தச் சம்பவம் சிங்கபூரில் இடம்பெற்றுள்ளது.



சபாநாயகர் டான் சுவான் ஜின் மற்றும் செங்லி ஹுய் ஆகியோரின் இராஜினாமாவை பிரதமர் லீ சியென் லூங் ஏற்றுக்கொண்டார்.

இதுதொடர்பாக பிரதமர் கூறும்போது, மக்கள் செயல் கட்சியின் உயர்ந்த தகுதி மற்றும் தனிப்பட்ட நடத்தையை பேணுவதற்காக சபாநாயகர் மற்றும் எம்.பி.யின் இராஜினாமா ஏற்று கொள்ளப்பட்டுள்ளது.

அவர்கள் தகாத உறவில் இருந்தனர். அதை கடந்த பெப்ரவரி மாதம் நிறுத்த சொன்ன பிறகும் அது தொடர்ந்தது. இந்த விவகாரத்தை முடிவுக்கு கொண்டு வருமாறு சபாநாயகரிடம் கூறினேன். ஆனால், அது தொடர்ந்தபடியே இருந்தது. இதனால் அவர்களது இராஜினாமாவை ஏற்றுக்கொண்டேன் என்றார்.

டான் சுவான் ஜின் எழுதிய இராஜினாமா கடிதத்தில் தனது குடும்பத்தில் கவனம் செலுத்த அரசியலில் இருந்து விலகுவதாக தெரிவித்துள்ளார்.

வொஷிங்டன்


# 1,600 லீட்டர் தாய்ப்பாலை தானம் செய்த தாய்

அமெரிக்காவைச் சேர்ந்த எலிசபெத் என்ற பெண் தனது குழந்தைகளுக்கு மட்டுமல்ல, தாய்ப்பால் இல்லாத பல குழந்தைகளுக்கும் தாய்ப்பால் தானம் செய்து உள்ளார்.

இவரது தியாகத்தை கின்னஸ் உலக சாதனை அமைப்பாளர்கள் பாராட்டி உள்ளனர்.

அமெரிக்காவின் ஓரிகான் பகுதியை சேர்ந்தவர் எலிசபெத் ஆண்டர்சன் சியாரா. ஹைப்பர்லாக்டேஷன் சிண்ட்ரோம் நோயால் பாதிக்கப்பட்டவர். ஒவ்வொரு ஒன்பது நிமிடங்களுக்கும் பால் உற்பத்தி செய்கிறார். அவரின் இந்தக் குறைபாடு எத்தனையோ குழந்தைகளின் பசியைப் போக்கியிருக்கிறது.

அவரது உடல், நாளொன்றுக்கு சுமார் 6.65 லீட்டர் தாய்ப்பாலை உற்பத்தி செய்கிறது. இது சராசரி தாய்க்கு சுரக்கும் தாய்ப்பால் சுரப்பை விட கிட்டத்தட்ட 8 முதல் 10 மடங்கு அதிகமாகும்.



2014 ஆம் ஆண்டில், ஹைப்பர்லாக்டேஷன் சிண்ட்ரோம் நோய் இருப்பது கண்டறியப்பட்டபோது, அவரது மார்பகத்தில் இருந்து, யாரும் கற்பனை கூட செய்து பார்க்க முடியாத அளவு தாய்ப்பால் சுரப்பு இருந்தது. அந்த நிலையில், தாய்ப்பால் வீணாகப் போவதை விரும்பாத எலிசபெத், பிற தாய்மார்களுக்கு உதவ முடிவு செய்தார்.

2 குழந்தைகளின் தாயான இவர் ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு ஊட்டமளித்துள்ளார். குறிப்பாக குறைமாதத்தில் பிறந்த குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றவும் உதவுகிறார்.

# 'பழிவாங்கும் ஆபாசப்பட' வழக்கு

இந்தோனேசியாவில் ஒரு சிறுமிக்குத் தெரியாமல் அவருடைய அந்தரங்க காட்சிகளைப் படம் பிடித்து சமூக வலைதளங்களில் பகிர்ந்த குற்றவாளிக்கு 6 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. குற்றவாளியான ஆல்வி ஹுசைன் முல்லா இணையத்தைப் பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இந்தத் தண்டனை போதாது என, பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

"இந்தத் தண்டனை, குற்றவாளிக்கு எதிராக ஒரு நீண்ட கால தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள போதிலும், பாதிக்கப்பட்டவரின் வேதனைக்குத் தகுந்த தண்டனையாக இல்லை" என்று பாதிக்கப்பட்ட சிறுமியின் சகோதரர் தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவின் பாண்டன் மாகாணத்தில் இந்தக் குற்றம் நடந்துள்ளது. பாதிக்கப்பட்ட சிறுமிக்குத் தெரியாமல் அவருடைய வீடியோவை குற்றவாளி சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பாக புதிய புகார் ஒன்றை பொலிஸாரிடம் அளிக்கப்போவதாகவும், பாலியல் பலாத்கார குற்றச்சாட்டின் அடிப்படையில் குற்றவாளிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அதில் கோரிக்கை விடுக்கப்போவதாகவும் சிறுமியின் சகோதரர் தெரிவித்தார்.

# 25 மழலையர்களுக்கு விஷம் கொடுத்த ஆசிரியைக்கு தூக்கு

சீனாவின் மத்திய பகுதியில் 2019 ஆம் ஆண்டு மழலையர் பள்ளி பெண் ஆசிரியர் ஒருவருக்கு சக ஆசிரியருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இதனால் அவரை பழிவாங்கும் நோக்கில் குழந்தைகள் சாப்பிடும் உணவில் வேதிப் பொருளை கலந்துள்ளார். இதனால் ஒரு குழந்தை பரிதாபமாக உயிரிழந்தது. மேலும் 24 குழந்தைகள் பாதிக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் நாட்டையே உலுக்கிய நிலையில், தற்போது அந்தப் பெண் ஆசிரியருக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

சக ஆசிரியரை பழிவாங்குவதற்காக மாணவர்கள் சாப்பிடும் உணவில் சோடியம் நைட்ரைட் கலந்துள்ளார். அதைக் குடித்ததும் அங்கிருந்த 25 மாணவர்களுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. அவர்கள் அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

விஷத்தை எடுத்துக் கொண்டதால் கடந்த ஜனவரி 2020இல் ஒரு குழந்தைக்கு உடல் உறுப்புகள் செயலிழப்பு ஏற்பட்டு உயிரிழந்தர். மேலும், சுமார் 24 பேருக்கு மோசமான உடல்நலக்குறைவு ஏற்பட்டது.





வாழைச்சேனை அந்நூரியன்ஸ் கிரிக்கெட் தொடரின்

# அங்குரார்ப்பண நிகழ்வு

எச்.எம்.எம். பர்ஸான்

வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலையின் பழைய மாணவர்களுக்கிடையில் நடைபெறவுள்ள கிரிக்கெட் தொடரின் அங்குரார்ப்பண நிகழ்வானது பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இத்தொடரானது இதே மைதானத்தில் எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இதில், 1998ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையான க.பொ.த சாதாரண தர பழைய மாணவர் அணிகள் 28 கலந்து கொள்ளவுள்ளன.

இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# முன்னிலையில் பாகிஸ்தான்

இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்டில் பாகிஸ்தான் முன்னிலை பெற்றுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், காலியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்த இப்போட்டியின் நேற்றைய மூன்றாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 5 விக்கெட்டுகளை இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த பாகிஸ்தான், 83 ஓட்டங்களுடன் அக்ஹா சல்மானை ரமேஷ் மென்டிஸிடம் இழந்தது.

பின்னர் செளட் ஷகீலுடன் நெளமன் அலி இணைந்து இனிங்ஸ் நகர்ந்த நிலையில் மென்டிஸிடம் 25 ஓட்டங்களுடன் அலி வீழ்ந்தார். இதனையடுத்து



வந்த ஷகீன் ஷா அப்ரிடியும் விஷ்வ பெர்ணாண்டோவிடம் வீழ்ந்திருந்தார்.

தொடர்ந்து வந்த நசீம் ஷாவின் பங்களிப்பிடன் ஷகீல் ஓட்டங்களைப் பெற்ற நிலையில், மென்டிஸிடம் ஷா வீழ்ந்திருந்தார். பின்னர் வந்த அப்ரார் அஹ்மட்டும் மென்டிஸிடம் வீழ்ந்த நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 461 ஓட்டங்களை தமது முதலாவது இனிங்ஸில் பாகிஸ்தான் பெற்றது. ஷகீல் ஆட்டமிழக்காமல் 208 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

பதிலுக்கு தமது 2வது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை, நேற்றைய 3ஆம் நாளில் விக்கெட் இழப்பின்றி 14 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில் அணித்தலைவர் திமுத் கருணாரத்ன ஆறு ஓட்டங்களுடனும், நிஷான் மதுஷ்க எட்டு ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர்.

கோப்பாய் தேசோதய சபையால்

# அண்ணா ஸ்ராருக்கு சீருடைகள், உபகரணம் வழங்கல்

எஸ். தில்லைநாதன்



கோப்பாய் தேசோதய சபையால் உரும்பிராய் கிழக்கு ஜெயபுரம் அண்ணா ஸ்ரார் கால்பந்தாட்ட அணிக்கு தேவையான விளையாட்டு சீருடைகள், விளையாட்டுஉபகரணங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான

# ஆஷஸ் தொடரைத் தொடர்ந்தும் தக்க வைக்குமா இங்கிலாந்து?

இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான நான்காவது ஆஷஸ் டெஸ்ட்டானது மன்செஸ்டரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், 2-1 என அவுஸ்திரேலியா முன்னிலை வகிக்கின்ற நிலையில் தொடரைக் கைப்பற்றுவதற்கு இப்போட்டியை



வென்றாக வேண்டிய நிலையில் இங்கிலாந்து காணப்படுகின்றது.

இங்கிலாந்து அணியில் கடந்த போட்டியில் விளையாடிய ஒலி றொபின்ஸனுக்குப் பதிலாக ஜேம்ஸ் அன்டர்சன் களமிறங்கவுள்ளார். தவிர, மூன்றாமிலக்கத்தில் மொயின் அலி துடுப்பெடுத்தாடவுள்ளமை உறுதிப்படுத்த ப்பட்டுள்ளது.

மறுபக்கமாக அவுஸ்திரேலிய அணியில் கடந்த போட்டியில் விளையாடிய ஸ்கொட் போலண்டை ஜொஷ் ஹேசில்வூட் பிரதியிடுவார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 19 ஜூலை 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.